விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 12 புதன்கிழமை (28.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 221




## உலகின் மிகப்பெரிய நீல இரத்தினக்கல்




### இரத்தினபுரியில் மீட்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள ஒரு வீட்டுத் தோட்டத்தில் உலகின் மிகப் 19

## கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரிப்பு மருத்துவமனைகளில் விடுதி பற்றாக்குறை

### பிரதி சுகாதார பணிப்பாளர் ஹேமந்த ஹேரத்



(கொழும்பு)

அண்மைய நாட்களில் கோவிட்-19 தொற்றுநோயாளர்கள் எண்ணிக்கை அதிகமாக அடையாளம் காணப்படுகின்றனர் என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர், பிரதி சுகாதார சேவைகள் பணிப் 19

## கொரோனா +1,688

(கொழும்பு)

நாட்டில்மேலும் 1,688 கோவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. 19

## கொரோனா 48 பேர் மரணம்

(கொழும்பு)

கோவிட் தொற்றால் மேலும் 48 பேர் மரணித்துள்ளதாக நேற்றைய தினம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட் 19

### செப்ரெம்பர் மாதத்தின் பின்னர்

# நாட்டை மூடிவைக்கும் எண்ணம் இல்லை



### அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் நாட்டில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தின் பின்னர் நாட்டை மூடிவைக்கும் எண்ணம் இல்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

### மல்லாவி அனிஞ்சியன்குளப் பகுதியில்

## கிணற்றில் விழுந்த கணவன், மனைவி பலி

19ஆம் பக்கம் பார்க்க

## மட்டுவிலில் மாடு மேய்க்க சென்றவர் சடலமாக மீட்பு

19ஆம் பக்கம் பார்க்க

### முல்லை.முள்ளியவளையில்

## சைக்கிளில் சென்றவர் திடீரென விழுந்து மரணம்

19ஆம் பக்கம் பார்க்க

## தீக்காயத்துக்குள்ளான குடும்பப் பெண் உயிரிழப்பு

19ஆம் பக்கம் பார்க்க

## அதிபர், ஆசிரியர்களின் சம்பள பிரச்சினைக்கு திங்களுக்குள் தீர்வு

### பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவை கூட்டத்தை தொடர்ந்து இறுதி தீர்மானம் எட்டப்படும் என பிரதமர் மகிந்தராஜபக்‌ஷ நேற்று அலரி மாளிகையில் 19

### கொரோனாவால்

## யாழில் ஆண் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் 19

### யாழில் 29 பேர் உட்பட

## வடக்கில் 44 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 29 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 44 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா 19

### நெடுந்தீவில் பதற்றம்

## 46 குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கிய தாதிக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ். நெடுந்தீவில் குழந்தைகளுக்கான தடுப்பூசி வழங்கிய தாதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கும் நிலையில் தடுப்பூசி ஏற்றிய 46 குழந்தைகள் மற்றும் குழந்தைகளுடன் சமுகமளித்த தாய்மாருக்கு கொரோனா 19



### யாழ்.ஆலயங்களில்

## சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை

யாழ்.அரச அதிபர்

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 375,000 சினோபாம் தடுப்பூசிகள் வடமாகாணத்திற்கு கிடைத்துள்ளன

## யாழுக்கு நாளை முதல் தடுப்பூசிகள் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கோவிட்-19 தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் கீழ் சீனாவில் இருந்து கிடைக்கப்பெற்ற சினோபாம் தடுப்பூசிகளில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இரண்டு இலட்சம், வவுனியா மாவட்டத்திற்கு 75,000 மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு தலா 50,000 தடுப்பூசிகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த நான்கு மாவட்டங்களிலும் இத்தடுப்பூசியானது 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும், 18 வயதிற்கு மேற்பட்ட கர்ப்பவதித் தாய்மார்களுக்கும் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட உள்ளதாக அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கனவே முதல் இரண்டு கட்டங்களிலும்ஒரு இலட்சம்பேருக்கு முதலாவது தடவை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 3 ஆம் கட்டமாக இரண்டு இலட்சம் பேருக்கு முதலாவது தடவையாக தடுப்பூசி வழங்கப்பட உள்ளது.

யாழ். மாவட்டத்தில் யூலை 29 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் தடுப்பூசி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தடுப்பூசி வழங்கும் நிலையங்கள் பற்றிய விபரங்கள் அப்பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரியினால் வெளியிடப்படும்.

இத்தடுப்பூசியானது முதல் நாள் யூலை 29 ஆம் திகதி வியாழக்கிழமை 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பாடசாலை ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட உள்ளது.

யாழ். மாவட்டத்தில் பணிபுரிகின்ற ஆசிரியர்களும், யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும், ஏனைய மாகாணங்களிலும் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு அவர்களது வதிவிடம் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தடுப்பூசிகள் வழங்கப்படும். இவர்கள் தமது ஆசிரிய பணியை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்து தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

முன்களப் பணியாளர்களுக்கான தடுப்பூசியானது 30 ஆம் திகதி யூலை இரண்டாம் நாள் முதல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்களப் பணியாளர்கள் தமது பிரிவிற்குரிய சுகாதார வைத்திய அதிகாரியை தொடர்பு கொண்டு தமக்கான தடுப்பூசி வழங்கும் நேரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.

18 வயதிற்கு மேற்பட்ட கர்ப்பவதித் தாய்மார்களுக்கு பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட தினத்தில் தடுப்பூசி வழங்கப்படும். இத்தடுப்பூசி ஏற்றப்படும் தினம் பற்றிய விபரங்கள் அப்பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரிகள் மூலம் கர்ப்பவதித் தாய்மார்களுக்கு அறியத்தரப்படும்.

தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளிற்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு யாழ். போதனா வைத்தியசாலையிலும், தெல்லிப் பளை, பருத்தித்துறை, சாவகச் சேரி மற்றும் ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைகளிலும் யூலை மாதம் 31 ஆம் திகதி மற்றும் ஆகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி சனிக்கிழமைகளில் காலை 8.00 மணி முதல் வழங் குவதற்கு ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளது.

அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தமது பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகளில் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியினை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும்.

தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு அழைத்து வர முடியாத நிலையில் படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கு அவர்களது வீடுகளுக்கே சென்று தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நோயாளர்களின் விபரங்களை அவர்களை பராமரிப்பவர்கள் அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இவர்களுக்கான தடுப்பூசியானது தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் இறுதி நாட்களில் வீடுகளுக்குச் சென்று வழங்கப்படும். (ம-03,33)

# வேலணையில் நேற்றும் 14 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேலணையைச் சேர்ந்த 14 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அடையாளம் காணப்பட்டவர்கள் அனைவரும் தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலணையைச் சேர்ந்த 126 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# யாழ். பல்கலைக்கழக மாணவிக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த 140 பேருக்கு யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அவர்களில் மாணவி ஒருவர் மட்டும் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த மாணவி வெளிமாவட்டத்தினைச் சேர்ந்தவர் என்றும் தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

மாணவி விஞ்ஞான பீடத்தினைச் சேர்ந்தவர் என்றும் தெரியவந்துள்ளது. (ம-03)

# கரவெட்டி பொதுமக்களுக்கான 3ஆம் கட்ட சினோபாம் தடுப்பூசி வழங்கல் நாளை நடைபெறும்

(கரணவாய்)

கரவெட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்களுக்கான 3 ஆம் கட்ட 1ஆவது சினோபாம் தடுப்பூசி வழங்கும் நிகழ்வானது நாளை வியாழக்கிழமை முதல் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும்.

30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தினமும் காலை 8.30 முதல் மாலை 3.30 வரை தடுப்பூசி ஏற்றப்படும். 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தனியான வரிசை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளைப் பெறத் தவறிய உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட ஆசிரியர்களுக்கான தடுப்பூசி நாளை வியாழக்கிழமை வழங்கப்படும். 30 வயதிற்கு மேற்பட்ட அனைத்து முன்னணிக் களப்பணியாளர்களும் சுகாதாரத் துறை உத்தியோகத்தர்களின் நெருங்கிய உறவினர்களும் தனியான வரிசையில் தினமும் மதியம் 1.30 முதல் மாலை 3.30 வரை வருகை தரும் ஒழுங்கு முறையில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தெரிவு செய்யப்பட்ட கர்ப்பவதிகளுக்கான தடுப்பூசியானது எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை அன்று வழங்கப்படும்.18 வயதிற்கு மேற்பட்ட 30 வயதிற்கு உட்பட்ட முன்னணிக் களப் பணியாளர்களுக்கான தடுப்பூசிகள் உரிய உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் 2.08.2021 திங்கட்கிழமை காலை 8.30 முதல் மாலை 3.30 வரை வழங்கப்படும். நடமாட முடியாதுள்ளவர்கள் தமது பெயர் விபரங்களை எமது அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் எதிர்வரும் காலங்களில் தங்களது வீடுகளிலேயே தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

அனைத்து பொதுமக்களும் விரைவாகத் தடுப்பூசிகளைப் பெற்று கோவிட் 19 நோயிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி ஜி.செந்தூரன் அறிவித்துள்ளார். (ம-03,60)


## கண்ணீர் அஞ்சலி



ஊரெழு கிழக்கு
நாவலம்பதி ஞானவயிரவர்
திருக்கோவிலின் திருக்கார்த்திகை
அபிஷேகத்தின் உபயகாரரும்
ஆலயத் திருப்பணிக்கு தாராளமாக
நிதி வழங்கியவருமான

அமரர்

**பொன்னம்பலம் தர்மலிங்கம்**

அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா நாவலம்பதி ஞானவயிரவப் பெருமானின் திருவடியில் சங்கமிக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பரிபாலன சபை
ஊரெழு கிழக்கு நாவலம்பதி ஞானவயிரவர் திருக்கோவில்

(7472)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த சூரியன் செவ்வாய் 10, ரோகிணி நட்சத்திரம்,இடபராசி முதலாம் பாதம் தனியார் வர்த்தக நிலையத்தில் பணி புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

☎-077 582 7035

(7474)

## காணி தேவை

மிருசுவில்/ எழுதுமட்டுவாள்/ கச்சாய் / விடத்தல்பளை/ பளை பகுதியில் 3 - 5 ஏக்கர் விவசாயம் செய்யக்கூடிய காணி விலைக்குத் தேவை.

காணி உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

076 088 6101

(C-2428)


# சுற்றுலாத்துறையை மேம்படுத்தத் தயார்

## வர்த்தக சங்கம்

(கொழும்பு)

தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகளுடன் நாடு இயல்பு நிலைக்கு திரும்பியதும் ஏற்றுமதி மற்றும் சுற்றுலா உள்ளிட்ட பல துறைகளை மேம்படுத்தத் தயாராக உள்ளதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் இலங்கை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை வர்த்தக சங்கத்துக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அதிகாரிகள், நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியுடன் மேற்கொண்ட சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்தனர்.

(ம-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு- கிழக்கிற்கு 1.6 மில்லியன் தடுப்பூசிகள்

## அமைச்சர் டக்ளஸிடம் கையளிப்பு

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்காக 16 இலட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.**



ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூய் ஷென்ஹொங் தடுப்பூசிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சம்பிரதாயபூர்வமாக கையளித்தார்.

வடக்கு-கிழக்கினை சேர்ந்த 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்கும் நோக்கோடு சுமார் 16 இலட்சம் தடுப்பூசிகளை சீன அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இந்தத் தடுப்பூசிகள் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரைகளுக்கு அமைய வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-8-33)

# ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு

(கொழும்பு)

கொரோனா தொற்று முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் வராத நிலையில் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுவதற்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவர் தனுஷ்க தில்ஷான் கமகேவினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

கொவிட்-19 பரவல் முற்றாக கட்டுப்பாட்டில் இல்லாத காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி நாடளாவிய ரீதியில் பல்வேறு தரப்பினர் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக நோய்த் தொற்று பரவும் வீதம் மேலும் அதிகரிப்பதுடன், மக்களின் வாழ்க்கை மற்றும் பொதுச் சுகாதாரம் என்பவற்றை பொருட்படுத்தாமையால் பாரதூரமான சுகாதார சீர்கேடு நாட்டில் உருவாகக் கூடும் என குறித்த முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் செயலாற்றுவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாதெனவும் முறைப்பாட்டாளர்கள் வலியுறுத்தியுள்ளதாகவும் அவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் முறைப்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5)

# அமெரிக்காவின் பொருளாதாரத் தடை பட்டியலில் இலங்கை

(கொழும்பு)

அமெரிக்காவினால் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை இணைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தகவல்களை மேற்கோள்காட்டி, இலங் கையில் உள்ள சீனத் தூதரகம் இந்த தகவலை வெளியிட்டு ள்ளது.

அதன்படி இலங்கை, இந்தியா, சீனா உள்ளிட்ட 27 நாடுகள் அமெரிக்காவின் தடைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# கொத்தலாவல சட்ட மூலத்தை எதிர்த்து யாழ்.பல்கலை ஆசிரியர் சங்கம் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு பல்கலைக்கழக முன்றலில் ஆர்ப்பாட்டம் இடம் பெறவுள்ளது.

கொத்தலாவல சட்ட வரைபு நிறைவேற்றப்படுமாயின் மக்களின் இலவசக் கல்வி உரிமை பறிக்கப்படுவதற்கான சூழ்நிலை உருவாகும். அத்துடன் பணத்திற்காக கல்வி வழங்கப்படுகிற சூழ்நிலையும் உருவாகும்.

இதனால் உயர் கல்வியின் தரம் பாதிக்கப்படுவ்துடன் சமூக ஏற்றத்தாழ்வுகளும் எதிர்காலத்தில் அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகும்.

எனவே இலவசக் கல்விக்கும் ஜனநாயக பூர்வமான கல்விக்கும் விரோதமான இந்தச்சட்ட மூலத்திற்கு எதிராக நாட்டுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டுமென யாழ்.பல் கலைக் கழகத்தின் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (நி-5)

# இலங்கைக்கு சுற்றுலா வர சீன மக்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை செப்டெம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்குமென்பதோடு மீண்டும் இலங்கைக்குச் சுற்றுலா மேற்கொள்ள சீன மக்களுக்கு அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷீ செங் ஹொங்வினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் உத்தியோகபூர்வமாகத் தடுப்பூசிகள் கையளிக்கப்பட்டன.

இதன்போது உரையாற்றுகையில் அவர் இந்த விடய த்தை தெரிவித்தார். (நி-5)

# சேதன விவசாயத்திற்கான அணுகுமுறை பல நாடுகளுக்கு உந்துசக்தியாக அமையும்

(கொழும்பு)

எதிர்கால சந்ததியினருக்கான உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதி செய்வதற்காக சேதன விவசாயத்துக்கான இலங்கையின் அணுகுமுறை, மேலும் பல நாடுகளுக்கு உந்துசக்தியாக அமையும் என தான் நம்புவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இத்தாலியின் ரோம் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய ஐ.நா. உணவு முறைமைகள் மாநாட்டின் முன் அமர்வு நிகழ்வில் காணொளி தொழில் நுட்பத்தின் ஊடாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் தலைமையில் நடைபெறும் இந்த மூன்று நாள் உச்சி மாநாட்டில், பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

தற்போதைய கொவிட் 19 தொற்று நிலைமையானது, நாம் அனைவரும் ஒன்றோடொன்று ஆழமாக இணைந்திருக்கும் ஒரே உலகினைப் பகிர்ந்து கொள்கிறோம் என்ற விழிப்புணர்வைப் பெரிதும் வலியுறுத்தி நிற்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மனித குலமானது சமூக, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக வேறுபட்டிருந்தாலும், அது உலகளாவிய சவால்களையே எதிர்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த சவால்களை தனித்தனியாக எதிர்கொள்ள முடியாது என தெரிவித்த ஜனாதிபதி, இவற்றை வெற்றி தொள்ள வேண்டுமெனில் கூட்டாக எதிர்கொள்ள வேண்டும் என உலகத் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி-5)


# மரண அறிவித்தல்

## அமரர். முருகேசு செல்லத்துரை



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் 1 ஆம் வட்டாரம் முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்லத்துரை அவர்கள் 27.07.2021 நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை சரோஜினிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் கஜானா (பொறுப்பு வைத்திய அதிகாரி, ஒட்டுசுட்டான்), கஜன் (வைத்திய அத்தியட்சகர் ஆதார வைத்தியசாலை , மாங்குளம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கெங்காதரன், Dr. டிமாலினி ஆகியோரின் மாமனாரும் றஜீவனா (மு/வித்தியானந்தாக் கல்லூரி மாணவி), ராகவ், ரதுசன், றனீஷா, றனோஷிகா (மு/ கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.07. 2021 இன்று புதன்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று 10.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக நாவற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1 ஆம் வட்டாரம்
முள்ளியவளை,

C-2427

தகவல் :- குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒரு நாள் தொடரை வென்றது ஆஸி

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான மாற்றியமைக்கப்பட்ட மூன்றாவது ஒருநாள் போட்டியில், அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை, அவுஸ்ரேலிய அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

பார்படோஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, 45.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 152 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, லீவிஸ் ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களையும் டேரன் பிராவோ 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சில், மிட்செல் ஸ்டாக் 3 விக்கெட்டுகளையும் ஹசில்வுட், அகர் மற்றும் ஸம்பா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் டர்னர் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.



இதனைத்தொடர்ந்து 153 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அவுஸ்திரேலியா அணி, 30.3 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் அவுஸ்திரேலிய அணி 6 விக் கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மத்தியு வேட் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களையும் அலெக்ஸ் கெர்ரி 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், செல்டோன் கொட்ரேல், அகீல் ஹொசைன், அல்சார்ரி ஜோசப், ஹெய்டன் வோல்ஷ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அஸ்டன் அகரும் தொடரின் நாயகனாக மிட்செல் ஸ்டாக்கும் தெரிவுசெய்யப்பட்டனர். (4)

# ஒலிம்பிக் வரலாற்றில் முதன்முறையாக தங்கம் வென்றது பிலிப்பைன்ஸ்




டோக்கியோ ஒலிம்பிக்கில் பெண்களுக்கான 55 கிலோ கிராம் பளுதூக்கல் போட்டியில் பிலிப்பைன்ஸின் ஹிடிலின் டயஸ் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். ஒலிம்பிக் வரலாற்றில் பிலிப்பைன்ஸ் பெறும் முதல் தங்கப் பதக்கம் இதுவாகும்.

தங்கத்தை வென்றதன் மூலம், ஒலிம்பிக்கில் தங்கத்திற்கான பிலிப்பைன்ஸின் 97 ஆண்டுகால காத்திருப்பையும் டயஸ் நிறைவுக்கு கொண்டு வந்தார்.

பிலிப்பைன்ஸ் முதன் முதலில் 1924 இல் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றது. மூன்று வெள்ளி மற்றும் ஏழு வெண்கல பதக்கங்களை ஒலிம்பிக் போட்டிகளில் இதுவரை பிலிப்பைன்ஸ் வென்றுள்ளது.

2016 ஆம் ஆண்டில், ரியோ விளையாட்டுப் போட்டியில் டயஸ் வெள்ளிப் பதக்கம் வென்றதுடன், 2018 ஆம் ஆண்டில் ஜகார்த்தாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பிடித்தமையும் குறிப்பிடத்தக்கது. (4)

# ஒலிம்பிக்கில் ஜூலை மாதம் 155 கொவிட் தொற்றாளர்கள்



ஒலிம்பிக்கில் புதிதாக இரு விளையாட்டு வீரர்கள் உட்பட ஏழு புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக டோக்கியோ ஒலிம்பிக் அமைப்பாளர்கள் நேற்று தெரிவித்துள்ளனர்.

ஜூலை முதலாம் திகதி முதல் ஒலிம்பிக் விளையாட்டுகளுடன் தொடர்புடைய மொத்தம் 155 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

டோக்கியோவில் தரையிறங்கிய பின்னர் கொவிட்-19 தொற்றால் செக் குடியரசு, அமெரிக்கா, சிலி, தென்னாபிரிக்கா மற்றும் நெதர்லாந்து ஆகிய அணி வீரர்கள் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4)

# இந்திய ஹொக்கி அணி இரண்டாவது வெற்றி



இந்திய ஆடவர் ஹொக்கி அணி 3-0 என்ற கணக்கில் ஸ்பெயின் அணியை வீழ்த்தியது.

32-வது ஒலிம்பிக் திருவிழா ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்து வருகிறது. இதில் இந்திய ஆடவர் ஹொக்கி அணி ஸ்பெயின் அணியை சந்தித்தது.

விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் இந்திய ஆடவர் ஹொக்கி அணி 3-0 என்ற கணக்கில் ஸ்பெயின் அணியை வீழ்த்தியது. இந்தியா ஒலிம்பிக் தொடரில் இந்திய ஆடவர் அணி 2-வது வெற்றியை பெற்று அசத்தியுள்ளது. (4)

## ஒலிம்பிக் குத்துச்சண்டை

# இந்திய வீராங்கனை லோவ்லினா காலிறுதிக்கு முன்னேற்றம்



பெண்கள் குத்துச்சண்டை 69 கிலோ எடைப்பிரிவில் இந்திய வீராங்கனை லோவ்லினா போர்கோஹைன் 3-2 என ஜேர்மனி வீராங்கனையை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

குத்துச்சண்டை போட்டியில் பெண்களுக்கான 69 கிலோ எடைப்பிரிவு ரவுண்ட் ஓஃப் 16 சுற்றில் இந்தியாவின் லோவ்லினா போர்கோஹைன் ஜேர்மனியின் நடின் அபேட்ஸ்-ஐ எதிர்கொண்டார். இதில் 28-29, 29-28, 30-27, 30-27, 27-30 என புள்ளிகள் பெற்று 3-2 என வெற்றி பெற்றார்.

இதன் மூலம் காலிறுதிக்கு முன்னேறினார்.

காலிறுதி போட்டி நாளை மறுதினம் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க போதுமான நிதி இல்லை- ரமேஷ்

(கொழும்பு)

ஆசிரியர் சம்பள முரண்பாடுகளை தீர்க்க வேண்டிய நிலை காணப்பட்டாலும் நாட்டின் தற்போதைய நிதி நிலைமைகளின் அடிப்படையில் தேவையான மாற்றங்களைச் செய்ய போதுமான நிதி பலம் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்க்க பிரதமர் தலைமையிலான துணை குழுவை நியமிக்க அமைச்சரவை முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போது. நாட்டின் தற்போதைய நிதி நிலைமைகளில் உடனடியாக மாற்றங்களைச் செய்ய அரசாங்கத்தால் முடியவில்லை என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரண குறிப்பிட்டார்.

ஆகவே ஆசிரியர் சம்பள திருத்தம் தொடர்பாக எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். சண்முகநாதன் பிரசாத்

மலர்வு: 1993.11.05 உதிர்வு: 2013.07.07



(C-2425)

எங்கள் செல்வமே பிரசாத்

இன்றுடன் இறைவனடி சேர்ந்து

ஆண்டுகள் எட்டு
முடிவடைந்த போதிலும்

நீ தினமும் எங்களுடன்
வாழ்ந்து கொண்டு
இருக்கிறாய்

கங்கைநீர் வற்றாது
ஊற்றெடுப்பது போல்

நீ எங்களுடன் பத்தொன்பது
ஆண்டுகள் வாழ்ந்த

அந்த நினைவு ஊற்று
பெருகிக் கொண்டே
இருக்கும்.

உன் புன்னகை பூத்த முகம்
எங்கள் நினைவில்

நிழல்படம் போல் ஓடிக்
கொண்டே இருக்கும்

உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போம்.

பத்திரகாளி கோவிலடி,
பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், சிறியதாய், அண்ணன்மார், அண்ணிமார்

# கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**மேற்படி எமது சங்கத்தில் பின்வரும் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| **பதவி** | : களஞ்சிய முகாமையாளர் 208/16 |
| **சம்பள அளவுத் திட்டம்** | :15135-120*10-135*10-17685 |
| **வயதெல்லை** | : 18-45 இற்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும் |
| **தகைமைகள்** | : |
| | கூட்டுறவு பணியாளர் 17வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் **அல்லது** கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரணம்) கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

மேற்படி பதவிக்காக விண்ணப்பப்படிவங்களை காரியாலயத்தில் பெற்று 06.08.2021 ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் **“தலைவர், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், நாவலர் மடம், கரவெட்டி”** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(C-2426)

**குறிப்பு: கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை கடமை புரியும் சங்கத்தினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.**

**தலைவர், கரவெட்டி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்**

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

## 27/7, குக் 1ம் ஒழுங்கை, வட்டாரம்-08

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம் 08 குக் 1ம் ஒழுங்கையில் உள்ள இல:27/7 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **வண அல்பேர்ட் V.ஜெபநாயகம், பணிப்பாளர், கானான் சிறுவர் இல்லம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **வண அல்பேட். வி. ஜெபநாயகம்** பிரசித்த நொத்தாரிசு R.பாலேந்திரா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4524/27.03.2001 ஆம் இலக்க உறுதியால் **சிவபாதசுந்தரம் பரமேஸ்வரனும் பெண் மாலினியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தினை **இராஜேந்திரா ரிக்கேஷ் உம் பெண் ஜெசி ஜெயபாலினியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு இ.த.விக்னராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1830/01.01.2015ஆம் இலக்க உறுதியால் **வண அல்பேர்ட். வி. ஜெபநாயகம்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **வண அல்பேர்ட் ஜெபநாயகமும், இராஜேந்திரா ரிக்கேஷ் உம் பெண் ஜெசி ஜெயபாலினியும்** ஆகியவர்கள் குறித்த 4524 மற்றும் 1830ம் இலக்க உறுதிகளானது தங்களில் 1ம் பேரை சிறுவர் இல்லத்தின் இயக்குநராக குறிப்பிட்டே நிறைவேற்றப்பட்டது என்றும் குறித்த ஆதனம் அவரது சொந்தப் பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம் என்றும் குறித்த ஆதனத்தில் பதிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லம் ஒன்றை 1ம் பேரின் மேற்பார்வையில் நடாத்தும் நோக்கிலேயே கொள்வனவு செய்திருந்தார் என்றும் குறித்த 4524ம் உறுதியானது அவரை இயக்குநர் என்று குறிப்பிட்டு நிறைவேற்றப்பட்டது என்றும் அப்போது அவர் இயக்குநர் ஆகிவிடவில்லை என்றும் குறித்த 4524ம் இலக்க உறுதியில் குறிப்பிடப்பட்ட இருபாலை. கோப்பாயில் அப்போது தற்காலிகமாக இயங்கி வந்த பதிவு செய்யப்படாத முறைசாரா சிறிய சிறுவர் இல்லங்களை பதிவு செய்வதற்குரிய ஏற்பாடுகளை 1ம் பேர் முன்னெடுத்து வந்தவேளையில். சிறுவர் இல்லங்களை நாடளாவிய ரீதியில் அரசாங்கம் ஒழுங்குமுறைப்படுத்திய செயற்திட்டத்தின் கீழ் தங்களில் 1ம் பேர் நடாத்தி வந்த குறித்த முறைசாரா சிறுவர் இல்லங்களிலிருந்த சிறுவர்கள் அரசாங்க காப்பகத்திற்கு மாற்றப்பட்டனர் என்றும் குறித்த சம்பவத்திற்கு பின்னர் 1ம் பேரின் மேற்பார்வையின் கீழ் சிறுவர் இல்லம் என்ற அமைப்பு காணப்படவில்லை என்றும் குறித்த சிறுவர் இல்லம் காணப்படாத காரணத்தினால் அதற்கு இயக்குநர் என ஒருவர் அவசியமில்லை என்றும் குறித்த ஆதனம் அவரது தனிப்பட்ட சொந்தமாக இருந்தமையாலும் 1830ம் இலக்க உறுதி மூலம் தங்களில் 2ம். 3ம் பேர்களுக்கு அறுதி விற்றிருந்தார் என்றும் குறித்த ஆதனத்தில் தங்களுக்குள்ள சொந்தத்தையும் ஆட்சியையும் உறுதிப்படுத்தியும் தெளிவுபடுத்தியும் பிரசித்த நொத்தாரிசு சாருஜா சிவநேசன் முகதாவில் 1336/13.02.2020ஆம் இலக்கத்தில் உறுதிப்படுத்தலும் வெளிப்படுத்தலும் உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்கள்.

**இராஜேந்திரா ரிக்கேஷ் உம் பெண் ஜெசி ஜெயபாலினியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **இராஜேந்திரா ரிக்கேஷ் உம் பெண் ஜெசி ஜெயபாலினியும்** ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்/ செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(7453)

# இணுவில் இந்துவின் கண்ணீர் அஞ்சலி

## அமரர்.ஸ்ரீமதி புவனாம்பிகை அம்மா மகாதேவக்குருக்கள்



எமது கல்லூரியின் சங்கீத ஆசிரியர்
**திரு.ம.தானுநாதசர்மா**
அவர்களின் தாயார்
**ஸ்ரீமதி புவனாம்பிகை அம்மா மகாதேவக்குருக்கள்**
காலமான செய்தியறிந்து கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த கவலையடைகின்றது.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு துயரால் வருந்தும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(7466)

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/ இணுவில் இந்துக் கல்லூரி.**

# இணுவில் இந்துவின் கண்ணீர் அஞ்சலி

## அமரர்.திரு. சிவஞானசுந்தரம் தர்மசேகரம்
(ஓய்வுபெற்ற இயந்திர இயக்குனர், சங்கானை ப.நோ.கூ.ச)

எமது கல்லூரியின் ஆங்கில ஆசிரியை **திருமதி விபூஷானந்தி சுந்தரகுமார்** அவர்களின் தந்தையார் **சிவஞானசுந்தரம் தர்மசேகரம்** அவர்களின் மரணச்செய்தியறிந்து கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த துயருருகின்றது.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு துயரால் வருந்தும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



(7466)

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/ இணுவில் இந்துக் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.ஆலயங்களில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை

## யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் இந்து ஆலயங்களில் சுகாதார நடைமுறை சரியாக பின்பற்றப்படாமை அவதானிக்கப் பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.**

தற்போது யாழ்.மாவட்டத்திலுள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில் நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுகாதார திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை பின்பற்றி யாழ்ப்பாண குடாநாட்டில் இந்து ஆலயங்களில் பூஜை வழிபாடுகள் திருவிழாக்கள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் வழங்கப்பட்டுள்ள அனுமதியினை மக்கள் பின்பற்ற வில்லை சுகாதார நடை முறையினை பின்பற்றாது இந்து ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை மிகவும் ஆபத்தானது இது ஒரு அபாய நிலைக்கு இட்டுச் செல்லக்கூடிய ஒரு விடயம் எனவே பொதுமக்கள் இந்த விடயம் தொடர்பில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும்.

இந்த இக்கட்டான கால கட்டத்தில் நாம் அனை வரும் ஒத்துழைத்தால் மாத்திரமே இந்த தொற்றில் இருந்து தப்பிக்க முடியும் சுகாதார பிரிவினரால் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள போதிலும் அந்த தளர்வினை சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்படுவதன் மூலமே வழமை போல் எமது செயற்பாடுகளை செயற்படுத்த முடியும்.

எனவே பொதுமக்கள் தற்போதுள்ள நிலைமையினை அனுசரித்து சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்படவேண்டும் எனத் தெரிவித்தார். (4-5-8-33)

# பருத்தித்துறையில் மேலும் 11 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)


பருத்தித்துறை நகர் உள்ளிட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 11 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

395 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையிலேயே 11 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

மேலும் பருத்தித்துறை நகரை அண்டி மருந்தகங்கள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் வங்கிகள் திறக்கப்படுகின்றன.(4-5-8-33)



**மலையகச் சிறுமி இஷாலினிக்கு நீதி வேண்டி யாழ். பிரதான பேருந்து நிலையம் முன்பாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம் பெற்றது. (படம்: சிவசாந்தன், ரவிசாந்த், கஜிந்தன்)**



இராணுவ பிரசன்னம் மற்றும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்களின் மத்தியிலும் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் நேற்றுக் காலை 9 மணிக்கு உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

# வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி நாலவலடியில் அண்மையில் இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்திய கும்பலில் இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஏனைய நான்கு பேர் தலைமறைவாகியுள்ள நிலையில் தேடப்பட்டு வருகின்றனர் என வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

உடுப்பிட்டி நாவலடியில் வீதியில் கதைத்துக் கொண்டிருந்த இளைஞர்கள் மீது மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த கும்பல் ஒன்று தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றது.

இச் சம்பவம் கடந்த 20ஆம் திகதி இரவு இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் தாக்குதல் நடத்திய கும்பலைச் சேர்ந்த ஒருவரை கடந்த வாரம் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியதையடுத்து சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மற்றொரு சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். 24 வயதுடைய அவர் நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இரண்டாவது சந்தேக நபரிடமிருந்து வாள் ஒன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது. (4-5-8-33)

# இறந்தவர்களை நினைவுகூரும் உரிமை இராணுவமயமாக்கல் மூலம் கேள்விக்குறி

## வலி.கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் நிரோஷ்



(யாழ்ப்பாணம்)

வெலிக்கடை சிறைப்படுகொலையினை நினைவு கூர்ந்து சுவரொட்டிகளை ஒட்டுவதை தடுப்பதற்கு இராணுவத்தினர் கடும் அழுத்தங்களைப் பிரயோகித்ததுடன் ஏற்கனவே தம்மால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளுக்கும் இனந் தெரியாதவர்கள் கழிவு ஒயில் பூசி வருவதாக வலிகாமம் கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை உரும்பிராய் பகுதியில் சுவரொட்டி ஒட்டிய போது உரும்பிராய்ச் சந்தியில் ஹன்டர் வாகனத்தில் தரித்து நின்ற பெருமளவான இராணுவத்தினர் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடுத்தனர்.

இதனையடுத்து எமக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இராணுவத்தினர் எம்மை பிரதேசத்தினை விட்டு வெளியேறுமாறு கூறினர். ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை சுற்றிச் சுற்றி படம் எடுத்தனர்.

பின்னர் நாம் அந்த இடத்தைவிட்டு வெளியேறி திரும்பி வரும் போது வல்லைப் பகுதி, ஆவரங்கால், புத்தூர் என சகல இடங்களிலும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளுக்கும் கழிவு ஒயில் பூசி மறைக்கப்பட்டிருந்ததுடன் சுவரொட்டிகள் அகற்றப்பட்டிருந்தன.

இவ்வாறாக நினைவுகூர்வதற்கான உரிமை தற்போது இராணுவ மயமாக்கலின் மூலம் கேள்விக்குட்படுத்தப் பட்டுள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்தார். (4-5-8)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

கல்வித் தகைமை

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைச்சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி ,பிறந்த திகதி , தேசிய அடையாள அட்டை இலக்கம் , கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல. 44, சோமசுந்தரம் அவனியூ , சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 அல்லது 071 455 3696 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் ஞா. தே.இரத்னகுமார் அறிவித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## தேசிய புற்றுநோய் ஒழிப்புப் பிரிவு தகவல்

(கொழும்பு)

**கடந்த இரண்டு தசாப்தங்களில் நாட்டில் வாய்ப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 மடங்கினால் அதிகரித்துள்ளதாக தேசிய புற்றுநோய் ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.**



ஒவ்வொரு வருடத்திலும் வாய்ப் புற்றுநோயினால் புதிதாக சராசரியாக 2 ஆயிரத்து 700 பேர் பாதிக்கப்படுவதாக தேசிய புற்றுநோய் ஒழிப்புப் பிரிவுப் பணிப்பாளர், பொதுச் சுகாதார விசேட வைத்திய நிபுணர் ஜானகி விதான பத்திரண தெரிவித்துள்ளார்.

வாய்ச் சுகாதாரத்தைப் பேணுவதற்கு பாக்கு பாவனையை நிறுத்துவோம் எனும் தொனிப்பொருளில் மக்களை விழிப்புணர்வூட்டும் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய புற்றுநோய் ஒழிப்புப்பிரிவு பணிப்பாளர், பொதுச்சுகாதார விசேட வைத்திய நிபுணர் ஜானகி விதான பத்திரண மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

## ஜனாதிபதிக்கு பிரத்தியேக அறை




(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஊடக சந்திப்பை நடத்துவதற்கு என அமெரிக்காவை போன்ற பிரத்தியேக அறை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஊடகவியலாளர் கலந்து கொண்டு ஜனாதிபதியிடம் அல்லது அவரது ஊடக பேச்சாளரிடம் கேள்விகளைக் கேட்கும் வகையில் இந்த அறை அமைக்கப்பட்டுள்ளது. (நி-5)



சீனாவினால் அன்பளிப்பு செய்யப்பட்ட மேலும் 16 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசி நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்துள்ளது.


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: கேட்டை
கி.பா:17 செவ் 1 சூரி 4 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: எழுதுவினைஞர்
எதிர்பார்ப்பு:சாதாரண தனியார்,அரச வேலை
தொ.இ: B/11996

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: - செவ் 5 சூரி 11 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:தனியார் கம்பனி வேலை
எதிர்பார்ப்பு:ஆசிரியர் மற்றும் வேறு
தொ.இ: B/11997

பிறப்பு:1991 இந்து நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா:25 செவ்,சூரி 8 இல்
உயரம்:175cm
தகைமை/தொழில்: சிரேஷ்ட வங்கி ஊழியர் (அரச)
எதிர்பார்ப்பு:தகுந்தவரன்
தொ.இ: B/11999

பிறப்பு:1979 இந்து
நட்சத்திரம்: மிருகசரிடம்
கி.பா: 8 செவ் 10சூரி11இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: சொந்த வியாபாரம்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/12000

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1982 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 46 செவ் 8சூரி6 அல்
உயரம்:5'10"
தகைமை/தொழில்:. தனியார் கம்பனி வேலை
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ:G/6027

பிறப்பு:1993இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி.பா:58 ¼செவ் 4 சூரி1 இல்
உயரம்:5'
தகைமை/தொழில்:A/L அழகுக்கலை
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்(கனடா, சுவிஸ்)
தொ.இ:G/6034

பிறப்பு:1988 இந்து நட்சத்திரம்: பூசம்
கி.பா:78 செவ்7 சூரி1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L, Dialog நிறுவனம்
எதிர்பார்ப்பு:
தொ.இ:G/6035

பிறப்பு: 1989இந்து நட்சத்திரம்:மகம்
கி.பா:18 ½செவ் 8 சூரி9 இல்
உயரம்:5'1"
தகைமை/தொழில்: B.Sc, தனியார் கம்பனி வேலை
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் (பட்டதாரி)
தொ.இ:G/6041

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# தடுப்பூசி செலுத்தியவர்களையும் டெல்டா வைரஸ் தாக்கும்

## மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்கான இரு தடுப்பூசிகளையும் செலுத்திக் கொண்டோருக்கும் டெல்டா பாதிப்பை ஏற்படுத்தலாம் என மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் ஆதாரங்கள் கிடைத்து வருவதாக தொற்றுநோயியல் நிபுணர்களை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

குறிப்பாக சில நாடுகளில் தற்போது தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இந்த சந்தர்ப்பத்தில் இது ஒரு சவாலாக அமையும். கொவிட் பரவலை கட்டுப்படுத்துவதற்கும், மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கும் கொரோனா தடுப்பூசிகள் செயற்படுகின்றன.

இருப்பினும், உலகெங்கிலும் உள்ள பெரும்பான்மையான மக்களுக்கு இன்னும் தடுப்பூசிகள் செலுத்தப்படவில்லை என தொற்று நோயியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (நி-5)

# ஒரு பில்.டொலர் கடனை மீளச் செலுத்தியுள்ளோம்

(கொழும்பு)

நாட்டில் பொருளாதார நெருக்கடி, டொலர் பற்றாக்குறை காணப்படுகின்றபோதிலும் கடந்த 26 ஆம் திகதி மீள செலுத்தப்பட வேண்டியிருந்த ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச கடனை எவ்வித தடையும் இன்றி மீள செலுத்தியுள்ளோம்.

சர்வதேச கடன்களை மீள செலுத்துவதில் அரசாங்கத்திற்கு எவ்வித சிக்கலும் கிடையாது என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போது இதனைத் தெரிவித்தார். (நி-5)

# நிசங்க உட்பட இருவர் விடுதலை

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் வழக்கில் இருந்து அவன்கார்ட் நிறுவன தலைவர் நிசங்க சேனாதிபதி மற்றும் பாலித பெர்னாண்டோ ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (நி-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதமடைந்த வீதிகள் இதுவரை புனரமைக்கப்படவில்லை



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் இந்துபுரம் மற்றும் திருமுறிகண்டி ஆகிய பகுதிகளில் 2019ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகளால் சேதமடைந்த வீதிகள் இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதாகவும் இதனால் தாங்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் மேற்படி கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட திருமுறிகண்டி. இந்துபுரம் ஆகிய பகுதிகளில் பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகள் கடந்த 2019ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக வீதிகள் அழிந்தும் பாலங்கள் சேதமடைந்தும் காணப்பட்டன.

இவ்வாறு சேதமடைந்த வீதிகள் இன்றுவரை தற்காலிகமாகவேனும் புனரமைத்து தரப்படவில்லை என்று பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதனால் தாங்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். எனவே மிகவும் பின் தங்கிய பிரதேசங்களாகக் காணப்படுகின்ற தங்களுடைய கிராமங்களுக்குரிய கிராமிய வீதிகளை புனரமைத்துத் தருமாறு கோரியுள்ளனர்.

குறிப்பாக ஏ-9 வீதியில் இருந்து மேற்படி கிராமங்களுக்கு செல்லுகின்ற வீதிகளில் அதிகளவான வீதிகள் இவ்வாறு சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

எனவே இந்த வீதிகளை புனரமைத்து தருவதற்கு பிரதேச சபை மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரதேச மக்கள் முன் வைத்துள்ளனர். (4-5-315)




# முல்லைத்தீவில் 30 ற்கு மேற்பட்ட பாடசாலைகளில் குடிநீர் நெருக்கடி

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 30 இற்கு மேற்பட்ட பாடசாலைகளில் காணப்படுகின்ற குடிநீர் நெருக்கடிக்கு நிரந்தர தீர்வுகள் பெற்றுக் கொடுக்க வேண்டும் என பெற்றோர்களால் தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலைகளின் நன்னீர் கிணறுகள் உவர் நீராக மாறியமை, கிணறுகளில் நீர் வற்றியமை போன்ற பல்வேறு காரணங்களினால் வீடுகளில் இருந்தே கூடுதலான மாணவர்கள் குடிநீரினை பாடசாலைகளுக்குக் கொண்டு செல்கின்ற நிலைமை காணப்படுவதாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களினால் சில பாடசாலைகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் பல பாடசாலைகள் குடிநீர் நெருக்கடியினை எதிர் கொண்டுள்ளன எனவும் தெரிவித்தனர். (4-5-8-350)

# இரட்டைக் கொலையுடன் தொடர்புடையவர் பதினொரு வருடங்களின் பின் கைது

(நெளுக்குளம்)

இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் 11 வருடங்களின் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா ஓமந்தை பன்றிக் கெய்தகுளம் பகுதியில் கடந்த 2011 ஆம் ஆண்டு கணவன்-மனைவி ஆகியோர் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த கொலைச்சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் இருவர் அக்காலப் பகுதியில் கைதுசெய்யப்பட்டு வவுனியா நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

ஆயினும் குறித்த இருவரும் நீதிமன்ற வழக்கு தவணைகளில் ஆஜராகாமல் தலைமறைவாகினர். அவர்களில் ஒருவர் ஓமந்தை பொலிஸாரால் கடந்த 25 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். (4-5-8-299)

# வெடிபொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் படுகாயம்

## விறகு வெட்ட சென்றபோது சம்பவம்



(புனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாலைப் பகுதியில் விறகு வெட்டிய போது வெடிபொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பல வன்பொக்கணை கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசித்து வருகின்ற 35 வயதுடைய குடும்பஸ்தர் அருகில் உள்ள பற்றைக்காட்டுக்குச் சென்று விறகு வெட்டியபோது மரத்தடியில் இருந்த வெடி பொருள் மீது கோடரி மோதி குண்டு வெடித்துள்ளது.

இதன்போது காயமடைந்த குடும்பஸ்தர் உடனடியாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் குறித்த இடத்திற்குச் சென்று குறித்த பகுதியை பாதுகாப்பற்ற பகுதியாக அடையாளப்படுத்தி மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-8-5-281)

# முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் 10 ஆண்டுகளாக புனரமைக்கப்படவில்லை

## பொதுமக்கள் குற்றச்சாட்டு



(அக்கராயன்)

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தினை கடந்த பத்தாண்டுகளில் புனரமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படாமை தொடர்பாக பொதுமக்களினால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் வட்டுவாகல் பாலம் புனரமைப்புத் தொடர்பாக ரூபாய் 1,000 மில்லியன் நிதி வரையான மதிப்பீடுகள் செய்யப்பட்டு மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டன.

அத்திட்டத்தில் தற்போதுள்ள வட்டுவாகல் பாலத்தினை அவ்வாறே இருக்க. வற்றாப்பளை பக்கமாக குறுகிய நீர்ப்பரப்பில் புதிய பாலம் ஒன்றினை அமைப்பது தொடர்பான யோசனைகளும் அத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

மூன்று தடவைகள் ஆட்சி மாற்றங்கள் இடம்பெற்றபோதும் வட்டுவாகல் பாலம் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள். நிதி ஒதுக்கீடுகள் இடம் பெறவில்லை.

இதன் காரணமாக மாரிமழையின் போது முத்தையன்கட்டுக் குளம் வான் கதவுகள் திறப்பு. ஏனைய ஆற்றுப்படுகைகள் ஊடாக வருகின்ற பெரும் வெள்ளம் வட்டுவாகல் பாலத்தினை மூடி பாய்ந்து பெருங்கடலைச் சென்றடையும்.

இதன் காரணமாக முல்லைத்தீவு நகருக்கான போக்குவரத்துகள் துண்டிக்கப்படுவதுடன் நந்திக்கடலில் மீன்பிடியில் ஈடுபடுபவர்களின் பாதுகாப்பற்ற சூழலும் உருவாகும் எனவும் தெரிவித்தார். (4-8-5-350)

# அக்கராயன் வைத்தியசாலை வரை பேருந்துகள் செல்ல வேண்டும்

## கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்கு பேருந்து சேவைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சு.தயாபரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மேற்கிற்கான அனைத்து பேருந்து சேவைகளும் அக்கராயன் வழியாகவே இடம்பெறுகின்றன.

முக்கொம்பனில் இருந்து வரும் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்து அக்கராயனுக்கு வருகை தரும் பேருந்தும் அக்கராயன் வைத்தியசாலை வழியாக கிளிநொச்சியினை சென்றடையும்.

குறித்த இரு பேருந்துகளும் கடந்த 18ஆம் திகதி தொடக்கம் பாதை சீரின்மையால் இடை நிறுத்தப்பட்டு இருப்பதன் காரணமாக முக்கொம்பன். [illegible] [illegible] கிராமங்கள் அக்கராயன் வைத்தியசாலைக்கு வருவதில் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

அக்கராயனுக்கு வருகை தரும் அரசியல்வாதிகளிடமும் அதிகாரிகளிடமும் பல தடவைகள் இக்கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் பயனில்லை.

கிளிநொச்சி மேற்கிற்கான சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகள் அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்கு வந்து திரும்புவதன் மூலம் அம்பலப்பெருமான் சந்தியில் இருந்து சுமார் 700 மீற்றர் தூரம் வரையான தூரத்தினை நோயாளர்கள் நடந்து செல்வதைத் தவிர்க்கலாம்.

இந்நிலையில் கிளிநொச்சி மேற்கிற்கு பயணிக்கின்ற அனைத்து பேருந்துகளும் வைத்திய சாலை வரை பயணிக்க வேண்டும் என்பதே இப்பிரதேச மக்களின் கோரிக்கையாகும் எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (4-5-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

28.07.2021
ஆடி 12, புதன்கிழமை
பஞ்சமி முழுவதும்
பூரட்டாதி பிற்பகல் 2.26 மணிவரை
சுபநேரம் 4.32- 6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சந்திராஷ்டமம்:ஆயிலியம், மகம்
அமிர்தசித்தம்

வளவன்

**மேஷம்** — தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள்.

**மிதுனம்** — தொழில் வளர்ச்சி கூடும் நாள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** — மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** — வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பிரயாண பயமுண்டு.

**கன்னி** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**துலாம்** — செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தூரத்து உறவினர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** — அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** — கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் ரீதியான முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** — கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்** — குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, கற்பனை மிகுதியான நாள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.

எல்லையற்ற இந்தப் பிரபஞ்சத்தின் மகா சக்தி உனக்குள்ளே இருக்கிறது

# கிளிநொச்சியில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இன்று தடுப்பூசி

(தருமபுரம்)

**கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து சுகாதார பணிமனையின் கீழ் உள்ள பிரதான கொரோனாத் தடுப்பு நிலையங்களிலும் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான கொரோனாத் தடுப்பூசி இன்றைய தினம் வழங்கப்படவுள்ளது.**

அந்தவகையில் தருமபுரம் மத்திய கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, வட்டக்கச்சி மத்திய கல்லூரி, உருத்திரபுரம் வைத்தியசாலை, பூநகரி சுகாதாரப் பணிமனை ஆகியவற்றில் நடைபெற இருப்பதனால் மக்கள் அனைவரையும் தவறாது ஊசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி சுகாதாரப் பணிமனையினர் தெரிவித்துள்ளனர். (4-5-8-316)

## மன்னாரில் மேலும் 17 தொற்றாளர்கள் அடையாளம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மேலும் 17 கொரோனா தொற்றாளர்கள் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 976 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். (4-5-285)

## 45 போத்தல் கசிப்புடன் இருவர் கைது



(முறிகண்டி)

45 போத்தல் கசிப்புடன் இருவர் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் விசேட மது ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட பொலிஸ் விசேட மது ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலிற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது 45 போத்தல் கசிப்பு மீட்கப்பட்டதுடன். சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கசிப்பை விற்பனைக்காக எடுத்துச்செல்லப்பட்ட நிலையில் பொலிஸார் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது ஒருவரிடம் 25 போத்தல் கசப்பும், மற்றைய நபரிடம் 20 போத்தல் கசிப்பும் இருந்ததாகவும் இருவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-5-8-100)



**வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் 38 ஆவது ஆண்டு நினைவு தினமான தமிழ் தேசிய வீரர்கள் தினம் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) அலுவலகத்தில் நினைவு கூரப்பட்டது.**
**(படம்: ஜோசப் நயன்)**

# கிளிநொச்சியில் கால்நடைகள் நீர்தேடி அலையும் அவலம்

(கண்டாவளை)



கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாட்களாக நிலவுகின்ற வரட்சியான காலநிலை காரணமாக பல பிரதேசங்களில் பொது மக்களுக்கான குடிநீர் பெற்றுக் கொள்வதிலும் சிரமங்கள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் தற்போது கால்நடைகளும் நீர்தேடி அலைகின்ற ஒரு அவல நிலை காணப்படுகிறது.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் கால்நடைகளுக்கான குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அமைத்த சிறு குளங்களும் நீர் வற்றிக் காணப்படுகின்றன.


இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் கால் நடைகள் குடிநீர் தேடி அலைகின்ற நிலை காணப்படுவதுடன் கால்நடைகளுக்கான மேய்ச்சல் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதனால் கால்நடைகளுக்கு நோய் பரவக்கூடிய ஒரு நிலை காணப்படுவதாகவும் கால்நடை பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-5-8-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கொந்தகையில் முதுமக்கள் தாழி ஆய்வுப் பணிகள் தீவிரம்



(சென்னை)

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடியில் நடந்துவரும் ஏழாம் கட்ட அகழாய்வுப் பணியில் கொந்தகையில் கண்டறியப்பட்ட முதுமக்கள் தாழிகளை ஆய்வு செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

கீழடியில் ஒரு நபரின் நிலத்தில் இதுவரை எட்டு குழிகள் தோண்டப்பட்டு மூடியுடன் கூடிய பானை, கத்தி போன்ற ஆயுதம், பானை ஓடுகள், உறை கிணறு உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கண்டறியப்பட்டன.

கொந்தகையில் நான்கு குழிகள் தோண்டப்பட்டு 15 முதுமக்கள் தாழிகளும் பத்து சமதள மனித எலும்புக் கூடுகளும் கண்டறியப்பட்டன. மூன்று முதுமக்கள் தாழிகளில் உள்ள பொருட்கள் வெளியே எடுக்கப்பட்ட நிலையில் நான்காவதாக உள்ள தாழியை ஆய்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. (8-5)

## நடிகர் விஜய்க்கு அபராதம் விதித்த உத்தரவுக்கு தடை

### சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு



(சென்னை)

நடிகர் விஜய்க்கு ரூ. 1 லட்சம் அபராதம் விதித்த உத்தரவுக்கு தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

பிரிட்டன் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட "ரோல்ஸ் ராய்ஸ் கோஸ்ட்" காருக்கு, நுழைவு வரி செலுத்துவதில் இருந்து விலக்கு கேட்டு, நடிகர்விஜய்சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு தனி நீதிபதி எஸ்.எம்.சுப்ரமணியம் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, விஜய் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு விஜய்க்கு ரூ.1 இலட்சம்அபராதம்விதிக்கப்பட்டது.

தனி நீதிபதி விதித்த தீர்ப்பை எதிர்த்தும், தன் மீது வைக்கப்பட்ட விமர்சனங்களை நீக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றில் விஜய் தரப்பில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் விஜய் தரப்பில் நேற்று முன்வைக்கப்பட்ட வாதத்தில், ரோல்ஸ் ராய்ஸ் காருக்கு நுழைவு வரி செலுத்தவேண்டும் என்கிற உத்தரவை எதிர்க்கவில்லை, அதை மதிக்கிறோம். ரோல்ஸ் ராய் காருக்கு நுழைவு வரி செலு த்த தயாராக இருக்கிறோம்" என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நடிகர் விஜய் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவுக்கு பதிலளிக்க தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியதோடு, நடிகர் விஜய்க்கு ரூ. 1 லட்சம் அபராதம் விதித்த உத்தரவுக்கு தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.(8-5)

## தலிபான்களின் தொடர் தாக்குதலால் அதிகரிக்கும் மரணங்கள்



(காபூல்)

இந்த வருட முதல் அரையாண்டுப் பகுதியில் ஆப்கானிஸ்தானில் மரணித்த அல்லது காயமடைந்த பொதுமக்களின் எண்ணிக்கை பாரிய அளவில் அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்த காலப் பகுதியில் ஆயிரத்து 600 இற்கும் அதிகமான பொதுமக்கள் பலியாகியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் பலியானவர்களை விட இந்த வருடம் பலியான பொது மக்களின் எண்ணிக்கை 47 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

தலிபான்களுடனான மோதல் தொடர்ந்தும் அதிகரித்து வரும் நிலையில், பொது மக்களின் மரணங்கள் மேலும் அதிகரிக்கலாம் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது. (8-5)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-4 191 266**

**தொற்று :- 195 728 697**

**(நேற்றையமாலை நிலவரம்)**

## இஸ்ரேல் -காசா

### மனித உரிமைகள் கண்

**(ஜெருசலேம்)**

**இஸ்ரேலிய படைகள் மற்றும் பாலஸ்தீனி**
**2021 மே மாதம் காசா பகுதி, இஸ்ரேலில்**
**போது யுத்த விதிகளை மீறியதாகவும்,**
**புரிந்துள்ளதாகவும் மனித உரிமைகள் கண்கா**
**தினம் தெரிவித்துள்ளது.**

## கொவிட் தொற்றுக்கு முற் தடுப்பூசி விரைவில் க

### டொரென்டோ பல்கலைக்கழகம்



(ரொரன்டோ)

கொவிட்-19 தொற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஏற்ற வகையிலான பாதுகாப்பானதும் செயல்திறன் கொண்டதுமான தடுப்பூசியினை பெறக் கூடிய நம்பிக்கை தென்படுவதாக ரொரன்டோ பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

கனடாவில் உள்ள ரொரன்டோ பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் பலதரப்பட்ட கொரோனா ரக கிருமி குறித்து ஆராய்ந்து வரும் நிலையில் இதனை தெரிவித்துள்ளனர்.

27 வகையான கொரோனா வைரஸ் கிருமிகளையும், தற்போதைய கொரோனா தொற்று

க்கு
கண
கள்
த்தப
பட்டு

## தலிபான்களின் தா ஆப்கான் இராணுவம் பா



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் தாக்குதல் அதிகரித்து வரும் நிலையில் ஆப்கான் இராணுவ வீரர்கள் பாகிஸ்தானில் அடைக்கலம் புகுந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் முழுவதும் திரும்ப பெறப்பட்ட நிலையில் தலிபான்களின் தாக்குதல் நடவடிக்கை தீவிரமடைந்துள்ளது. பல்வேறு இடங்களை கைப்பற்றிய அவர்கள் தற்போது ஆப்கான் -பாகிஸ்தான் எல்லை பகுதிகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

## அசாம் மாநிலத்தில் 6 பொலிஸார் உ

(டில்லி)

அசாம் மாநிலம்- குலி செர்ராவின் எல்லையோரப் பகுதியில் வீதி அமைக்கும் பணி தொடர்பில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில், 6 பொலிஸார் உயிரிழந்து ள்ளனர்.

குறித்த சம்பவத்தை தொடர்ந்து அசாம்- மிசோ ரம் மாநில எல்லையில் குண்டுவெடிப்பு சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

இதனால் அப்பகுதி முழுவதும் ஏராளமான பொலி ஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



மேலும் எல்லைப் பிரச்சி னைக்கு விரைவாக தீர்வு காண வேண்டும் என இரு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# போரில் வெளிப்படையான போர்க்குற்றங்கள்

## காணிப்பகம்

னிய ஆயுதக் குழுக்கள்
முன்னெடுத்த போரின்
போர்க்குற்றங்களை
காணிப்பகம் நேற்றைய



ஹமாஸ் போராளிக் குழுவுக்கு எதிரான 11 நாள் போரின்போது. இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதல்கள் "வெளிப்படையான போர்க்குற்றங்கள்" ஆகும்.

62 பாலஸ்தீனிய பொதுமக்கள் கொல்லப்பட்டதாக மூன்று இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களை விசாரித்த பின்னர் சர்வதேச மனித உரிமை அமைப்பு தனது முடிவுகளை வெளியிட்டது.

அதேநேரம் இஸ்ரேலிய மக்கள் தொகை மையங்களை நோக்கி 4 ஆயிரத்து 360 க்கும் மேற்பட்ட வழிகாட்டப்படாத ரொக்கெட் தாக்குதல்களை பாலஸ்தீனிய போராளிகள் முன்னெடுத்ததாகவும் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.


எவ்வாறாயினும், இந்த அறிக்கை மோதலின்போது இஸ்ரேலிய நடவடிக்கைகள் குறித்து விசேடமாக கவனம் செலுத்தியுள்ளதுடன், ஒகஸ்ட் மாதத்தில் ஹமாஸ் மற்றும் பிற பாலஸ்தீனிய போராளி குழுக்களின் நடவடிக்கைகள் குறித்து தனி அறிக்கை வெளியிடும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (8-5)

## ற்றுப்புள்ளி வைக்கும் ண்டுபிடிக்கப்படும்




து உள்ளான ஆயிரக் கணக்கானவர்களின் மாதிரிகள் என்பன ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி குறித்த விரிவான விளக்கம் "ஜேனல் ஒப் புரோட்டியோம் ரிசர்ச்" என்ற விஞ்ஞான ஏட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-5)




மாற்று எரிசக்திக்கான விழிப்புணர்வை ஏற்படுத்த எரிபொருள் இல்லாமல் சூரிய மின்சக்தியால் உலகைச் சுற்றிய விமானம் தனது பயணத்தை நிறைவு செய்து 5 ஆண்டுகள் முடிந்து உள்ளது. இந்த விமானத்தை இயக்கிய விமானி அவரின் பயணத்தை நினைவு கூர்ந்து சமூகவலைத் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## ாக்குதல் தீவிரம்; ாகிஸ்தானில் தஞ்சம்



தலிபான்களின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் ஆப்கான் இராணுவத்தை சேர்ந்த 5 அதிகாரிகள் உட்பட 46 பேர் பாகிஸ்தானில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்களுக்கு தேவையான உதவிகளை பாகிஸ்தான் செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (8-5)

# கடலிலுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் பணியில் 4 வயது சிறுமி

(பிரேசிலியா)

பிரேசிலில் தன் தந்தை யின் உதவியுடன் 4-வயது சிறுமி கடலில் கொட்டிக் கிடக்கும் பிளாஸ்டிக் கழிவு களை அப்புறப்படுத்தி வருகிறார்.

தன் தந்தை. எடுத்த கடல் சார் உயிரினங்கள் குறித்த திரைப்படத்தால் ஈர்க்கப்பட்ட சிறுமி நினா கோம்ஸ் பிளாஸ்டிக் கழிவுகளால் மீன் மற்றும் ஆமைகள் உயிரிழப்பதை தவிர்க்க முயன்று வருவதாக தெரி வித்தார்.



ஆண்டுக்கு ஒரு கோடியே 10 லட்சம் தொன் பிளாஸ்டிக் கழிவுகள் கடலில் கொட்டப்படுவதாகவும், அதனால் ஆயிரக்கணக்கான கடல் வாழ் உயிரினங்கள் இறப்பதாகவும் ஐ.நாவுக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-5)

## வன்முறை ...யிரிழப்பு



...சி ...வு ...ரு மாநில முதல மைச்சர்களும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை வலியுறுத்தியுள்ளனர். (8-5)

# அமெரிக்கப் படைகள் ஆண்டு இறுதிக்குள் ஈராக்கை விட்டு வெளியேறும்

## அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன்



(வோஷிங்டன்) இந்த ஆண்டு இறுதிக்குள் ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறும் என்றும் இருப்பினும் ஈராக் இராணுவத்திற்கு தொடர்ந்தும் பயிற்சி அளித்து ஆலோசனை வழங்கும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் மற்றும் ஈராக் பிரதமர் முஸ்தபா அல் காதிமியுடன் வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஈராக்கில் தற்போது 2 ஆயிரத்து 500 அமெரிக்க படைகள் உள்ள நிலையில் அவர்கள் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் அந்நாட்டுக்கு உதவும் முயற்சியாக அமெரிக்க துருப்புக்களின் எண்ணிக்கை அப்படியே வைத்திருக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (8-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி விலை விரைவில் குறைக்கப்படும் - அமைச்சர் மஹிந்தானந்த



(கொழும்பு)

**அரிசி ஆலை உரிமையாளர்களுடன் ஏற்படுத்தப்படும் ஒப்பந்தத்திற்கு அமைவாக அரிசி வகைகளின் விலைகள் அடுத்த வாரமளவில் குறைக்கப்படும் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

அதற்கமைய இதற்கான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கும் வகையிலான சட்ட ஏற்பாடு பாராளுமன்றத்தில் அடுத்த வாரம் நிறைவேற்றப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சட்ட ஏற்பாடு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் குறித்த அரிசி வகைகளுக்கான விலை நிர்ணயம் செய்யப்படும் எனவும் நாட்டின் 80 வீதமான மக்கள் பயன்படுத்தும் "நாடு" அரிசியின் விலையை 100 ரூபாயினை விட குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார்.

(நி-5)

# போலித் தாள்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க பகுதியில் ஆயிரம் ரூபா போலித் தாள்கள் ஆறுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது போலித்தாள்களை அச்சிடுவதற்கு பயன்படுத்திய இயந்திரமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபர் நேற்று முன்தினம் மாலை கட்டுநாயக்க பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் ஆயிரம் ரூபா போலித் தாள்களை கொண்டு, பொருட்களை கொள்வனவு செய்ய முயன்றுள்ளார்.

தாள் தொடர்பில் சந்தேகம் கொண்ட வர்த்தக நிலையத்தின் உரிமையாளர், இது தொடர்பில் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டுக்கு இணங்கவே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதின்போது அவரிடமிருந்து மேலும் ஆயிரம் ரூபாய் போலித் தாள்கள் 5 மீட்கப்பட்டதுடன், அவற்றை அச்சிடப் பயன்படுத்திய இயந்திரமும் பறிமுதல் செய்யப்பட்டது.

கைதான சந்தேக நபர் வெல்லம்பிட்டி, சேதவத்தை பகுதியில் வசிப்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (நி-5)

# பயங்கரவாத தாக்குதல் அபாயம் இலங்கையில் குறைந்துள்ளது

## பிரிட்டன் தகவல்

(லண்டன்)

இலங்கையில் பயங்கரவாதிகள் தாக்குதல்களை நடத்த முயற்சிக்கும் ஆபத்து மிகக் குறைவடைந்துள்ளதாக பிரிட்டன் தனது பயண ஆலோசனையில் தெரிவித்துள்ளது.

முன்னதாக பிரிட்டன் அதன் பயண ஆலோசனையில் இலங்கையில் பயங்கரவாத தாக்குதல் நடத்தக்கூடும் என்று எச்சரித்ததுடன், ஹோட்டல், சுற்றுலா தளங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்ற வெளிநாட்டினர் பார்வையிடும் இடங்கள் உட்பட தாக்குதல்கள் கண்மூடித்தனமாக இருக்கக் கூடும் என்றும் எச்சரித்தது.

இந் நிலையிலேயே இலங்கையில் பயங்கரவாதிகள் தாக்குதல்களை நடத்த முயற்சிக்கும் ஆபத்து மிகக் குறைவடைந்து வருகிறது என்று பிரிட்டன் அதன் அண்மைய பயண ஆலோசனையில் தெரிவித்துள்ளது.



2019 ஏப்ரல் 21 அன்று, இலங்கையில் 3 தேவாலயங்கள் மற்றும் மூன்று ஹோட்டல்கள் பயங்கரவாத தாக்குதலுக்குள்ளாகின. இதனால் 250 ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், மேலும் பலர் காயமடைந்திருந்தனர்.

அது மாத்திரமின்றி இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் தனது நாட்டுப் பிரஜைகளுக்கு பிரிட்டன் மேலும் பல ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது.

(நி-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2364

Search for people, places and things

### சிவகுமாரி

ஹலோ எக்ஸ்கூஸ்மீ.. இந்த பக்கமாக ஒரு மான் போனதை பாத்தீங்களா?



### ரதி

-My Friend Status...



என்ன விலை அழகே...!
சொன்ன விலைக்கு வாங்க வருவேன்...!



முதல்ல பெட்ரோல் வாங்குறியா பாரு
அப்புறம் அவளை வாங்கலாம்

### பத்மநாதன்

நம்ம யாரை நம்பறோமோ அவங்க தான் நம்மல ஏமாத்துறாங்க மாமா..



என்ன மாப்ள லவ் பெயிலியரா...



லவ் பெயிலியரா... எங்க அம்மா நேற்று பூரி செய்யறேன்னு சொல்லிட்டு...
செய்யாமல் விட்டத சொன்னேன் மாமா...

### யதுர்ஷியா

"உன் பேர் என்ன?"
"ராமராஜன் சார்:



"வீட்டிலே எப்படிக் கூப்பிடுவாங்க?"

"கிட்ட இருந்தா மெதுவாக...,
தூரமாக இருந்தா சத்தமாக"

### தயாளன்

மெரினா பீச்சில் மீன் சாப்பிட்ட இரண்டு பேர் மண்டைய போட்டுட்டாங்களாம்

பாவம் அப்பறம்



அப்பறமென்ன அந்த மீன் மண்டைய நாய் தூக்கிட்டு போய்டுச்சு....

### கௌதம்

கடவுள்: மனிதா, உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்

மனிதன்: இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ரோடு போட்டுக் கொடு சாமி!!

கடவுள்: அது கஷ்டமாச்சே... கடலிலே எப்பிடிப்பா ரோடு போடு முடியும் வேறு ஏதாவது கேள்.

மனிதன்: அப்ப என் மனைவி பேச்சைக் குறைக்கனும், நான் சொல்றதை மட்டும் தான் கேட்கனும், எதிர்த்து பேசக்கூடாது...!!! அப்படி செய்யுங்கள்... சாமி..!!!

கடவுள்: அமெரிக்காவுக்கு ரோடு சிங்கிளா, டபுளா...?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையவழிக் கல்வியினால் கண்களுக்கு ஆபத்து

## கண் அறுவை சிகிச்சை நிபுணர் எச்சரிக்கை

**(கொழும்பு)**


**மாணவர்கள் இணையத்தின் மூலம் கல்வியில் தொடர்ந்து ஈடுபடுவதால் கண்களில் பிரச்சினைகள் உருவாகும் அபாயம் உள்ளது என கொழும்பு கண் மருத்துவமனையின் சிறப்பு கண் அறுவைச்சிகிச்சை நிபுணர் டாக்டர் தீபானி வெவெல்ல தெரிவித்துள்ளார்.**


அவர் மேலும் தெரிவிக்கையில், இணைய வகுப்பின் போது குழந்தைகள் அவ்வப்போது கண் சிமிட்ட வேண்டும். இடைக்கிடையில் வெவ்வேறு திசைகளில் பார்க்க வேண்டும்.

ஒரு மடிக்கணினி அல்லது தொலைபேசி திரையை நீண்ட நேரம் பார்த்தால் கண்கள் சிமிட்டுவதை நிறுத்தி, கண்களை உலர வைத்துவிடும்.

இணைய வகுப்பின் போது ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கும் ஒருமுறை கண்களை இலகுவாக்கி சுற்றி பார்க்க வேண்டும் என்றும் மருத்துவர் தெரிவித்தார். (நி-5)

# பேர்ள் கப்பல் விபத்து; இதுவரை 307 கடல் வாழ் உயிரினங்கள் உயிரிழப்பு






(கொழும்பு)

கொழும்பு கடற்பரப்பில் தீப்பற்றி எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் சம்பந்தப்பட்ட கடல் பேரழிவைத் தொடர்ந்து இதுவரை மொத்தம் 307 கடல் வாழ் உயிரினங்கள் இறந்துள்ளன.

அதன்படி 258 ஆமைகள், 43 டொல்பின்கள் மற்றும் ஆறு திமிங்கலங்கள் இறந்துவிட்டதாக வன விலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அரசாங்க ஆய்வாளர் திணைக்களம் இந்த விவகாரம் குறித்த அறிக்கையை நேரடியாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஒப்படைக்கவுள்ளது. (நி-5)

# பலத்த காற்றில் சாய்ந்த கோபுரம்



(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் நேற்று பிற்பகல் வேளை பலத்த காற்றுடனான மழை பெய்ததமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்தது.

அத்துடன், பலத்த காற்று வீசியதால் அக்கரைப்பற்று அல்-பாத்திமியா வித்தியாலயத்துக்கு அண்மையில் அமையப்பெற்ற தொலைத் தொடர்பு கோபுரம் சாய்ந்து வீழ்ந்துள்ளது.

இதனால், சில வீடுகளுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளதுடன், மக்களின் உடமைகள் சிலவற்றுக்கும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. வீடுகளில் இருந்த சிறுவர்கள், வயோதிபர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

மேற்படி தொலைத் தொடர்புக் கோபுரம், கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் இப்பகுதி மக்களின் பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் அமையப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-5)

# தடுப்பூசி பெற்றும் உயிரிழந்த துயரம்

(கொழும்பு)

சினோபார்ம் தடுப்பூசி இரண்டையும் பெற்றிருந்த ஒருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்த சம்பவம் இலங்கையில் நடந்துள்ளது.

73 வயதுடைய ஒருவர், காலி-கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் இவ்வாறு உயிரிழந்திருக்கின்றார்.

இவர் மே 29ஆம் திகதி முதலாவது சினோபார்ம் தடுப்பூசியையும், ஜூன் 28 ஆம் திகதி இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றிருந்தார்.

இந்த நிலையில் அவருக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனத்தை தொடர்ந்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். அவருக்கு கொரோனா தொற்றும் உறுதியாகியிருந்தது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தேநீர்

சுமார் ஒரு ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர் சீனா தேசத்திலே ஒரு ராஜா இருந்தார். அவருடைய பெயர் சுஷின்-நங். அவர் எப்போதும் வெந்நீர்தான் குடிப்பார்.

ஒருநாள் அவருக்காக அடுப்பிலே தண்ணீர் கொதித்துக்கொண்டு இருந்தது. அந்த சமயத்திலே அடுப்புக்கு மேலே வளர்ந்து வந்திருந்த ஏதோ ஒரு செடியிலிருந்து... காய்ந்து சருகாப்போயிருந்த ஒரு இலை கொதிக்கின்ற நீரிலே விழுந்துவிட்டது. அதை யாரும் கவனிக்கவில்லை.

சிறிது நேரத்தில் ஒரு நல்ல மணம் அதிலேயிருந்து வர ஆரம்பித்தது. வெந்நீரை சாப்பிட்ட மன்னருக்கு அந்த வாசனை ரொம்பவும் பிடித்துப் போனது.

என்னவென்று பார்த்தால் இலை கிடந்தது. "சரி... இனிமேல் இந்த இலையை போட்டு தண்ணீரைக் கொதிக்க விடுங்கள்." என்று உத்தரவு போட்டுவிட்டார்.

அந்த இலை என்னவென்று நினைக்கிறீங்கள்?

அது தான் தேயிலை. ஆக தேநீர் ஆரம்பமானது ஆசியாவிலே தான். அதற்குப்பிறகு ரொம்ப காலம் கழித்து 1610 லே தான் அது ஐரோப்பாவுக்கு வந்து சேர்ந்தது.

அப்போதெல்லாம் தேயிலை உற்பத்தி அதிகமாக இல்லை. அதனாலே தேநீர் என்கிறது வசதியானவர்கள் வீட்டிலே தான் கிடைக்கும். இப்போது மாதிரி தெருக்குத்தெரு வாங்கிக் குடிக்க முடியாது.

இன்றைக்கு தண்ணீருக்கு அடுத்தப்படியாக உலகம் முழுவதும் அதிகமாகப் பருகப்படுகின்ற பானம்... தேநீர் தான். காப்பிக்கூட அதற்கு அடுத்த படி தான்.

ஒரு காலத்தில் ரஷ்யாவிலே எப்படி தெரியுமா?

தெருவிலே தேநீர் வண்டி வருகின்றது என்று சொன்னால்... மக்கள் ஓடிவந்து கூடிவிடுவார்கள். அந்த காலத்திலேயெல்லாம் ஆஸ்திரேலியாவில் ஒரு பழக்கம் உண்டு. அதாவது...

காலையிலே வேலைக்குப் போறதிற்கு முன்னாடி தண்ணீரைக் கொதிக்க வைத்து அதிலே சில தேயிலைகளைப் போட்டுவிட்டுப் போயிடுவார்கள்.

19 ஆம் நூற்றாண்டு மத்தியில் அமெரிக்காவில் ஹார்பர்ஸ் என்கின்ற பத்திரிகையில் ஒரு வேடிக்கையான செய்தி வெளியாகி இருந்தது.

அதாவது... ஒரு அமெரிக்கா கிராமத்துப் பெண் நகரத்திற்குப் போனாள் தன் தோழியைப் பார்ப்பதற்கு. அப்போது தேயிலை என்கின்ற ஒரு அபூர்வப்பொருள். பணக்கார வீடுகளில் மட்டும் வரவழைத்து வைத்திருந்தார்கள். அந்தத் தோழி ஒரு பவுண்டு தேயிலையை இவளுக்கு கொடுத்திருந்தாள்.

கிராமத்துப் பெண்... இதற்கு முன்பு தேயிலையைப் பார்த்தது இல்லை... வீட்டுக்குப் போய் பிரித்துப் பார்த்தாள்.

இதுவும் ஒரு வகை கீரை போல இருக்கிறது- என்று நினைத்துவிட்டு... அந்த ஒரு பவுண்ட் தேயிலையையும் தண்ணீர் விட்டு வேக வைத்து வடிகட்டிவிட்டு... சக்கையை வைத்துவிட்டு சாற்றை சாக்கடையில் கொட்டிவிட்டாள்!

தேநீர் ஐரோப்பாவிலே காலடி எடுத்து வைத்ததுமே ஒரு பிரஞ்சு அறிஞன் சொல்லி விட்டார்...

"இது இந்த நூற்றாண்டை ஆளவந்திருக்கிற புது எஜமான்!" என்று. பிரிட்டிஷ்காரர்கள் தங்களுடைய முதல் கோப்பைத் தேநீரை அடைந்தது 1650 ல் தான்.

இன்னொரு முக்கியமான செய்தி. அமெரிக்காவுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தது யார் என்று நினைக்கிறீங்கள்? தேநீர் தான்.

அது எப்படி தெரியுமா? "பாஸ்டன் டீ பார்ட்டி" என்கின்ற வார்த்தை ரொம்ப பிரபலம்.

திடீர் என்று தேயிலைக்கு வரியை அதிகப்படுத்தி 342 பெட்டி தேயிலையை இங்கிலாந்து அமெரிக்காவுக்குக் கப்பலேற்றி அனுப்பியது.

தேயிலை மீது வரியை பொறுக்காத அமெரிக்கர்கள். 1773 டிசெம்பர் 16 ஆம் திகதி பிரிட்டிஷ் கப்பலில் இருந்த 342 தேயிலைப் பெட்டிகளையும் தூக்கி பாஸ்டன் ஹார்பர் துறைமுகக் கடலில் வீசி விட்டார்கள். காலணி விடுதலைப் போருக்கு இதுதான் ஆரம்பம். இப்படி தேநீரைப் பற்றி சுவையான செய்திகள் பல உண்டு.

இந்த காலத்திலே யார் வீட்டுக்குப் போனாலும் உடனே ஒரு பெரிய கோப்பையிலே இவருக்குத் தேநீர் கொடுத்தார். இவர் அதை வாங்கி சாப்பிட ஆரம்பித்தார். அவ்வளவு தான். அவர் உடனே ஒரு பெரிய கோப்பையில் அவருக்கு தேநீர் கொடுத்தார். இவர் அதை வாங்கி சாப்பிட ஆரம்பித்தார். அவ்வளவுதான்.

அங்கே கட்டிப்போட்டிருந்த நாய் குரைக்க ஆரம்பித்துவிட்டது. ஏன் உங்கள் நாய் குரைக்குது? என்று கேட்டார் இவர். இதற்கு அவர் சொன்னார். "இந்த நாய்க்குட்டி எப்பவும் இப்படி தாங்க... அதோடு பாத்திரத்தில் வேறு யார் எதைச் சாப்பிட்டாலும் இப்படித்தாங்க குரைக்குது" என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

38

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



அதன்படி, மாகாண சபைக்கு காணியை விடுவிப்பதற்கான ஒருவிண்ணப்பம் (விண்ணப்பத்தில் காணியின் தேவை, முன்மொழியப்பட்ட பயன்பாடு பற்றிய சுருக்கமான குறிப்பு, தேவையான காணியின் நில அளவைப் படம்) மத்திய அரசின் காணி அமைச்சுக்கு அனுப்பப்படல் வேண்டும். அவ் விண்ணப்பம் அமைச்சினால் பரிசீலிக்கப்பட்டு பின்னர் அது அமைச்சரால் காணி விடுவிப்பு சான்றிதழ் மூலம் செயற்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்படும்.

**13ம்திருத்தச்சட்டத்தின் படி (பின்னிணைப்பு II ,1.2) மாகாணசபை விடயமொன்றுக்கு அத்தகைய மாகாண சபையினால் தேவைப்படுத்தப்படும் மாகாணத்தினுள் உள்ள அரச காணியை அரசாங்கம் ஒவ்வொரு மாகாணசபைக்கும் கிடைக் கக் கூடியதாக செய்தல் வேண்டும். மாகாண சபையானது அத்தகைய அரச காணியை அவ் விடயத்தை ஆளுகின்ற சட்டங்களுக்கும் நியதிச் சட்டங்களுக்கும் இணங்க நிருவகித்தலும், கட்டுப்படுத்தலும் பயன்படுத்துதலும் வேண்டும்.**

அக்கோரிக்கை 500 ஏக்கருக்கும் அதிகமாக இருக்கும் போது அது ஒப்புதலுக்காக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். காணி அமைச்சு மற்றும் அமைச்சரவை ஆகிய இரண்டிடமிருந்தும் ஒப்புதல் பெறப்படும் போது, விடுவிப்புச் சான்றிதழ் காணி அமைச்சரால் வழங்கப்படும். அதன் பின் காணி ஆணையாளர், அரச அதிபர்கள் மூலம் மாகாண சபைக்கு காணியை விடுவிப்பார்.

இந்நடைமுறையைப் பார்க்கும் போது அரச காணிகளைக் கோருவதில் மாகாண சபைகளின் நிலை ஒரு தனியார் நிறுவனம் அல்லது தனிநபர் அரச காணியைப் பயன்படுத்த அனுமதி கோருவதைப் போன்றதாக உள்ளது. அதாவது ஒரு மாகாண சபையின் அரச காணியின் அளவும் பயன்பாடும் மத்திய அரசின் தனிச் சிறப்புக்கு இச் சுற்றறிக்கை மூலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த சுற்றறிக்கை மாகாண சபைகளுக்கான சட்டபூர்வமான அதிகாரத்துடன் பிணைக்கப்படவில்லை. எனவே இச் சுற்றறிக்கை சட்டத்திற்கு முரணானது என்று சொல்வதைவிட வலிமையற்ற ஒன்றாகவே கருத முடியும்.

**3) காணி அதிகாரங்கள் ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள எழுத்திலான சட்டங்களுக்கு அமைவாகக் கையாளப்படல் வேண்டும்.**

அரச காணியின் உரித்து இலங்கைக் குடியரசிடமே தொடர்ந்தும் இருந்து வர வேண்டும் எனக் கூறும் 13 ஆவது திருத்தச் சட்டப் பின்னிணைப்பில் அரசியலமைப்பின் உறுப்புரை 33 (d)(இது 20ஆவது திருத்தத்தில் 33(f) ஆகும்) இல் குடியரசின் பொது இலச்சினையைப் பாவிக்கும் தத்துவத்தை கொண்டுள்ள ஜனாதிபதியினால் காணிக் கையளிப்புகளுக்கும் காணி வழங்கல்களுக்குமாக கூறப்பட்டுள்ளவற்றிற்கும் மற்றும் அரச காணி சம்பந்தமாக ஏற்கனவே ஆக்கப்பட்டுள்ள எழுத்திலான சட்டங்களுக்கு அமைவாகக் கையாளப்படல் வேண்டும் எனவும் கூறுகிறது.

அதாவது 13ஆம் திருத்தத்தில் மாகாண சபை நிரலில் உள்ள விடயங்கள் சம்பந்தமான மத்திய அரசின் அமைச்சர்களிடம் இருக்கும் அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் மாகாண அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு மாற்றம் செய்வதற்கு மாகாண சபையில் சட்டங்கள் இயற்றப்படல் வேண்டும். இதுபற்றி இக்கட்டுரையில் முன்னர் குறிக்கப்பட்டிருந்தது. இங்கு சற்று விபரமாக ஆராயப்படுகிறது.

மாகாண சபைகள் தமது காணி அதிகாரத்தினைப் பயன்படுத்துவதற்கு அவை காணிக் கையளிப்புகளுக்கும் காணி வழங்கல்களுக்குமாக எழுத்திலான காணி நியதிச் சட்டங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மத்திய பாராளுமன்றத்தைப் போலல்லாமல் மாகாண சபைகளின் சட்ட அதிகாரமானது அரசியலமைப்பாலும் மாகாண சபை நியதிச் சட்டங்களாலும் வரையறுக்கப்பட்டிருப்பதுடன், நீதித்துறை ரீதியாக எந்த நேரத்திலும் அவைகளை மாற்றியமைக்கக்கூடியதாகவும் உள்ளது. அதாவது உயர் நீதிமன்றத்தால் கேள்விக்கு உட்படுத்தவும் மாற்றியமைக்கவும் முடியும். ஆனால் பாராளுமன்றத்தால் உருவாக்கப்படும் சட்டங்கள் அவ்வாறானவையல்ல. அதாவது மத்திய சட்டவாக்கமானது சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர் அவ் அரசியலமைப்புடன் பொருந்துகின்றதா என்பது தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் வரையறுத்த பார்வைக்கு உட்படுகிறது. அது சட்டமாக்கப்பட்டு விட்டால் அவைகள் அரசியலமைப்பிற்கு முரணாக இருந்தாலும் அரசியலமைப்பால் உருவாக்கப்பட்ட செயல்முறைகளை மீறுவதாக இருந்தாலும் மீறும் முறையில் சட்டமாக்கப்பட்டிருந்தாலும் பாராளுமன்றத்தை சவாலுக்கு உட்படுத்தமுடியாது. இதனால் இலங்கை பாராளுமன்றத்தால் ஏற்படுத்தப்படும் சட்டங்களே சட்டம் எனப்படுவதுடன் மாகாண சபைகளால் சட்டரீதியாக உருவாக்கப்படுபவைகள் நியதிச் சட்டங்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றன.

சட்டவாக்க அதிகாரங்கள் பற்றி இன்னுமொரு விடயம் தெரிந்திருப்பது நல்லதாகும். 13ஆவது திருத்தத்திற்கு முன்பதாக இலங்கையில் இருந்த ஒரேயொரு சட்டவாக்க அமைப்பு இலங்கைப் பாராளுமன்றமாகும். உள்ளூராட்சி சபைகள் சட்டங்களை உருவாக்குவதற்கு அதிகாரங்களைக் கொண்டிருந்தாலும் அவைகள் ஆளும் சட்ட வீச்சுக்களிற்கு இறுக்கமான வரையறைகளுக்குட்பட்டே தமது சட்டங்களை உருவாக்கக்கூடியதாக இருந்தது. மாகாணசபைகளுக்கு பகிரப்பட்ட சட்டவாக்க அதிகாரங்கள் உள்ளூராட்சிகளுக்கு கொடுக்கப்பட்டதைவிட பரந்துபட்டதாக உள்ளது. அவை அரசியலமைப்பால் நிறுவப்பட்ட சட்டவாக்க அமைப்புக்களாக உள்ளன. அவைகளின் சட்டவாக்க அதிகாரங்களானவை அரசியல் அமைப்பில் சொல்லப்பட்டுள்ளன. ஆகவே மாகாண சபைகள் சட்டவாக்கலில் பாராளுமன்றத்திற்கு கீழ்ப்பட்ட நிறுவனங்களாக உள்ளதுடன், உள்ளூராட்சி சபைகளுக்கு மேற்பட்ட நிலையினதாகவும் உள்ளன.

13 ஆவது திருத்தத்தால் அரசியலமைப்புக்கு அறிமுகம் செய்யப்பட்ட [illegible] ஆவது அட்டவணையானது மூன்று விடய நிரல்களை உள்ளடக்கியுள்ளது என்று முன்னர் பார்த்தோம். அவை மாகாண சபைகள் நிரல் (நிரல்I), ஒதுக்கிய நிரல் (நிரல்II), ஒருங்கிணை நிரல் (நிரல்III). மாகாண சபைகளுக்கு நியாயாதிக்கம் உள்ள வியங்களானவை மாகாணசபை நிரலில் உள்ளதுடன், அனைத்திற்கும் பொதுவான நிரலில் (ஒருங்கிணை நிரல்) சட்டம் மற்றும் அதிகாரம் மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் பகிரப்பட்டுள்ளது.

ஆனாலும் அங்கு மத்தி மேலோங்கியுள்ளது. அதேவேளையில் ஒதுக்கிய நிரலில் மாகாண சபைக்கு சட்டம் இயற்ற இயலாத விடயங்கள் கொடுக்கப்பட்டுள்ளதுடன், மாகாண சபைக்கு சட்டம் இயற்றும் அதிகாரம் இல்லாததும் பாராளுமன்றம் மாத்திரம் சட்டம் இயற்றும் அதிகாரத்தைக் கொண்டதுமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மாகாண சபைகள் நியதிச் சட்டத்தை எவ்வாறு ஆக்க முடியும் என்பதை அரசியலமைப்பின் பின்வரும் உறுப்புரைகள் விளக்குகின்றன.

உறுப்புரை-154-G(1) - ஒவ்வொரு மாகாண சபையும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒன்பதாவது அட்டவணையின் நிரல் I (மாகாண சபை நிரல்) இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயம் தொடர்பிலும் அம்மாகாணத்திற்கு ஏற்புடையனவான நியதிச் சட்டங்களை ஆக்கலாம்.

13-ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154G(2)- ஒன்பதாவது அட்டவணையின் பட்டியலை திருத்துவதற்கான அல்லது பட்டியலில் உள்ளதை நீக்குவதற்கான சட்டமூலம் எதுவும் இருப்பின், அத்தகைய சட்டமூலமானது வர்த்தமானியில் வெளியிட்ட பின்னரும் பாராளுமன்ற நிகழ்ச்சித்தாளில் இடப்படும் முன்னரும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அச்சட்டமூலம் மீதான மாகாண சபை ஒவ்வொன்றினதும் கருத்துரைகளைத் தெரிவிப்பதற்கென ஒவ்வொரு மாகாணசபைக்கும் ஜனாதிபதியினால் ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தாலேயொழிய சட்டமாக வருதல் ஆகாது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு அடையாள அட்டை

## விவசாய அமைச்சு தகவல்

(கொழும்பு)

விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள மற்றும் 1.6 மில்லியன் குத்தகை விவசாயிகளுக்கும் விவசாய அடையாள அட்டைகளை வழங்க விவசாய அமைச்சு தயாராகி வருகிறது.

விவசாய அடையாள அட்டைகளை வழங்குவது 1971 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அந்த திட்டம் தற்போது செயலற்றதாகியுள்ளது.

இதன் காரணமாக விவசாயியின் அடையாளத்தை உறுதிப்படுத்த ஒரு ஆவணம் இல்லாமை மற்றும் விளைச்சலுக்கான கடன்களைப் பெற்றுக்கொள்ளும் போது அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாமை உள்ளிட்ட பல சிக்கல்கள் எழுந்துள்ளதாக விவசாய அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

வயல் அல்லாத நிலங்கள் தொடர்பான தகவல் அமைப்பை அமைத்து, நில உரிமையாளர்களுக்கும், குடியிருப்பாளர்களுக்கும் இரண்டாம் கட்டத்தில் விவசாய அடையாள அட்டையை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

அடையாள அட்டைகளை வழங்குவதனூடாக விவசாயிகளுக்கு பல நன்மைகள் கிடைக்கும் எனவும் விவசாய அமைச்சு சுட்டிக்காட்டுகிறது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

### சுக வாழ்வு அருளும் குருவாரம்



குரு தசை நடைமுறை முறையில் இருக்கும் காலங்களில் அதனால் கெடுபலன்கள் நடக்காமல் இருக்க அதிதேவதையான தட்சிணாமூர்த்தியை வியாழக்கிழமை தோறும் வழிபட்டு அர்ச்சனை செய்து வரவேண்டும்.

மஞ்சள் நிற உடைகளை அணிவதாலும், புஷ்பராக மணியை தரிப்பதாலும், மஞ்சள் நிற வஸ்திர தானம் செய்வதாலும், கொண்டைக்கடலை தானியத்தை தானம் கொடுப்பதாலும், குருவார விரதம் இருப்பதாலும் குருதோஷம் நிவர்த்தியாகும்.

குருவார விரத வழிபாட்டை வளர்பிறை வியாழக்கிழமையில் தொடங்கி செய்வது சிறப்பானது. சூரிய உதயத்திற்கு முன்பே எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு மஞ்சள் நிற ஆடை அணிந்து, நெற்றியில் சந்தனம் பூசி வடக்கு முகமா'க அமர்ந்து பூஜையை தொடங்க வேண்டும். தட்சிணாமூர்த்தியின் திரு உருவப்படம் அல்லது தங்களது ஆன்மிக குருவின் படங்களை பூஜைக்குப் பயன்படுத்தலாம்.

ஒரு மஞ்சள் விரிப்பை விரித்து அதில் தெய்வ படங்களை மலர் தூவி அலங்கரித்து கிழக்கு நோக்கி வைத்து, ஆறு தீபங்களை அகல் விளக்காக ஏற்றி வைக்க வேண்டும். இனிப்புகள், முல்லை மலர்கள், கொண்டைக் கடலை, சர்க்கரை பொங்கல், கற்கண்டு போன்றவற்றை நைவேத்தியமாக படைத்து தூப, தீப, கற்பூர ஆராதனைகள் செய்து குரு கீர்த்தனைகளை பாடி பிரார்த்தனை செய்தபடி பூஜையை நிறைவு செய்ய வேண்டும்.

அன்று ஒருவேளை மட்டும் உணவு உட்கொண்டு விரதம் இருக்க வேண்டும். அன்று முழுவதும் மௌன விரதம் இருப்பது நல்லது. இந்த விரதம் மூலம் குருவின் ஆசீர்வாதம் பரிபூரணமாக கிடைக்கும்.

குரு பகவான் அருளைப்பெற தஞ்சையில் இருந்து கும்பகோணம் செல்லும் பாதையில் 8 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்து இருக்கும் திட்டை குரு பகவான் ஆலயம் சென்று வழிபடலாம்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## இறம்பொடையில் சிறுமி சடலமாக மீட்பு

(கொத்மலை)

கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறம்பொடை மேல் கடைவீதி பகுதி வீடொன்றிலிருந்து 15 வயது சிறுமியொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சிறுமி தனது அறையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் சிறுமியின் வீட்டார் 119 என்ற அவசர தொலைபேசி ஊடாக வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்றதாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

## ஒரு நாளில் அதிகளவு தடுப்பூசி செலுத்தப்பட்டது

(கொழும்பு)

இலங்கையில் ஒரேநாளில் 4 இலட்சத்து 37 ஆயிரத்து 878 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தொற்றுநோயியல் பிரிவு தரவுகளின்படி, இதுவரை 7.4 மில்லியனுக்கும் அதிகமானவர்களுக்கு கொரோனா தடுப்பூசிகள் இலங்கையில் வழங்கப்பட்டுள்ளன. (நி-5)

## அவுஸ்திரேலியாவில் தீ விபத்து தமிழ்ச்சிறுவன் உயிரிழப்பு

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற தீவிபத்தில் நான்கு வயதான தமிழ் சிறுவன் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இதில் ரித்திஷ் கிருஷ்ணநீதன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டின் காஸ் மூலம் ஏற்பட்ட தீ, பற்றி எரிந்து வேகமாக வீட்டின் ஏனைய இடங்களுக்கும் பரவியிருக்கிறது.

ரித்திஷ் தூங்கிக்கொண்டிருந்த அறைக்குள் போக முடியாதளவுக்கு வீட்டினை தீ சூழ்ந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 130 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 180 | 140 | 180 | 200 |
| தக்காளி | 80 | 120 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 40 |
| கோவா | 180 | 170 | 180 | 200 |
| கரட் | 160 | 200 | 200 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 120 |
| புடோல் | 80 | 80 | 80 | 160 |
| வாழைக்காய் | 40 | 70 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 220 | 250 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 100- | 100 | 100 |
| பாகற்காய் | 300 | 200 | 270 | 320 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 70 | 140 | 160 | 160 |
| பயற்றங்காய் | 160 | 130. | 100 | 120 |
| லீக்ஸ் | 200 | 220 | 140 | 240 |
| பீற்றூட் | 120 | 130 | 140 | 200 |
| கறிமிளகாய் | 300 | 340 | 260 | 320 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 250 | 240 |
| போஞ்சி | 300 | 300 | -- | 320 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 50 | 50 |
| தேசிக்காய் | 120 | 80 | 120 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 50-80 | 50-70 |
| இராசவள்ளி | 200 | -- | 280 | -- |
| வெங்காயப்பூ | 160 | 180 | 260 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 60 | 40 |
| வல்லாரை | 15 | 60 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | 40 | 40-50 | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## சீலனின் தந்திரம்



வைரபுரிஎன்ற நாட்டில் பல கோடிகளுக்கு அதிபனான சீலன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் தயாள குணம் கொண்டவன்.

அந்நாட்டு மன்னன் பர்வதனனின் ஆருயிர் நண்பன். பொக்கிஷத்தில் பணக்குறைவு ஏற்பட்ட போதெல்லாம் மன்னனுக்குத் தேவைப்பட்ட பணத்தைக் கொடுத்து பிறகு வாங்கிக் கொள்வான் சீலன்.

அப்படி கிடைத்த வட்டிப் பணத்தை ஏழை எளியவர்களுக்கு கொடுத்து உதவி வந்தான் சீலன்.

ஓவியக் கலையில் கைதேர்ந்தவன் சீலன். மற்ற கலைகளிலும் அவனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அழகான சிற்பங்கள், வண்ண ஓவியங்கள், வேலைப்பாடுடன் கூடிய கைவினைப் பொருள்கள் என்றால் என்ன விலை கொடுத்தாவது வாங்கி விடுவான்.

ஆனால், அப்படி வாங்கும் பொருள்களை யார் கேட்டாலும் கொடுக்கவும் மாட்டான்.

மன்னன் பர்வதனுக்கு, சீலனின் இந்தப் பிடிவாதக் குணம் ஒன்றுதான் பிடிக்காமல் இருந்தது. அதனால் சீலனிடமிருந்த அழகிய பொருள்களில் ஒன்றைக் கூடப் பெறமுடியாமல் போனது.

ஒருநாள் சீலனைக் காண வாலிபன் ஒருவன் வந்தான். கிழிந்த ஆடைகளை அணிந்து தாடி வளர்த்துக் கொண்டிருந்த போதிலும் அவன் உயர் குடியில் பிறந்தவன் என்று சீலனுக்கு தெரிந்துவிட்டது. அவன் அந்த இளைஞனை வரவேற்று உட்காரும் படி சொன்னான்.

"ஐயா! என்னை இந்தக் கோலத்தில் கண்டவர்கள் எல்லோரும் விரட்டினார்களே ஒழிய என்னை "உட்கார்" என்று இதுவரை யாரும் சொல்லியதில்லை. மிக்க நன்றி. நீங்கள் கலை அம்சம் கொண்ட பொருள்களை விலைக்கு வாங்கிக் கொள்வதாகக் கேள்விப்பட்டேன்.

(தொடரும்)

# மகாபாரதம்




ஜனகருக்கும் அவரது மனைவிக்கும் நடந்த உரையாடலை அருச்சுனன் தருமருக்கு சொல்ல எழுந்தான்.

தருமரின் வைராக்கியம் பற்றி அறிந்த அருச்சுனன் வருத்தத்துடன் தருமரைப் பார்த்து, நாட்டை விட்டு நீங்கி பிச்சை ஏற்கத் துணிந்த ஜனகரைப் பற்றி அவர் மனைவி கூறியதை உலகு அறியும்.

பொன்னையும் பொருளையும், மனைவி மக்களையும், நண்பரையும் பிரிந்து ஒன்றும் இல்லவராய்ப் பிச்சைத் தொழிலை மேற்கொண்டவராய்த் திரிந்த ஜனக மாமன்னரை அவர் மனைவி யாரும் இல்லாத போது நெருங்கி பேசினாள். "மாபெரும் அரசைத் துறந்து ஒடுத்து ஒரு பிடி அரிசி எப்போது கிடைக்கும் என ஏன் எதிர்பார்க்கிறீர்? ஆயிரமாயிரம் விருந்தினரை உபசரித்த நீர் ஏன் இப்படி வயிறு வளர்க்க பிச்சை எடுக்கிறீர்.

உம் தாய் இப்போது மகனை இழந்து காணப்படுகிறாள். பெற்ற தாயையும் உற்ற தாரத்தையும் தவிக்க விட்டு இப்படிச் செல்வது முறையா? அரசர் பலர் உம்மை சுற்றிச் சுற்றிப் போற்றி வழிபட்டு மகிழ்ச்சியுடன் இருந்தார்களே, அவர்களை எல்லாம் துன்பத்தில் ஆழ்த்திவிட்டு நீர் எந்த உலகை அடையப் போகிறீர்.

நாட்டையே சோகக் கடலில் தள்ளிவிட்டுச் செல்லத் துணிந்த உமக்கு நிச்சயமாக முக்தி கிடைக்காது. உண்மையிலேயே நீர் சினத்தை விட்டு விட்டீரா? துறவுக் கோலத்தின் சின்னமாக விளங்கும் இந்தத் தண்டத்தையும் காஷாயத்தையும் ஒருவன் பிடுங்கினால் உமக்கு சினம் வராதா? யாவற்றையும்விட்டுத்தொலைத்த உமக்கு ஒரு பிடி அரிசியின் மீது மட்டும் ஆசையில்லையா?

ஒன்றைப்புரிந்து கொள்ளுங்கள். துறவிகளுக்கு உணவளிக்கும் இல்லற வாழ்வே மேலானது. அதுதான் உலகில் நிலையானது. உணவு அளிக்கும் அரசன் இல்லாவிடின் மோட்சத்தை விரும்பும் துறவிகளும் தங்கள் துறவு வாழ்க்கையில் நிலை குலைந்து போவர். துறவறம் சிறப்படைவதே இல்லறத்தால்தான்.

உயிரானது உணவால் நிலை பெற்றுள்ளது. ஆகவே உணவு அளிப்பவன் உயிர் அளிப்பவன் ஆவான். (உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆவர்.)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனே எனக்குத் தந்தையாகவும், ஆசானாகவும், வழிகாட்டியாகவும்(இன்னும் பலவாகவும்) இருக்கும் போது இந்த பௌதீக உல கத்தில் நான் எதற்கும் ஏன் அஞ்ச வேண்டும்? ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இறை நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படுத்தி விடாதீர்கள்

உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கும் கொரோனாத் தொற்று இலங்கையையும் விட்டுவைப்பதாக இல்லை.

இந்நிலையில் கொரோனாத் தொற்றைத் தடுப்பதில் அதனோடு சம்பந்தப்பட்டவர்கள் கடும் பிரயத்தனம் செய்து வருகின்றனர் என்பது தெரியப்படுத்த வேண்டிய தகவல்.

இவை ஒருபுறமிருக்க, தற்போது பிசிஆர் பரிசோதனைக்குப் பதிலாக அன்டிஜன் பரிசோதனை பரவலாக நடந்தாகிறது.

பொதுவில் அன்டிஜன் பரிசோதனை மூலம் கொரோனாத் தொற்றை உறுதி செய்வது பொருத்துடையதல்ல என்றும் அன்டிஜன் பரிசோதனையின்போது கொரோனாத் தொற்று இருப்பதான அறிகுறிகள் தென்பட்டால், சம்பந்தப்பட்டவருக்கு பிசிஆர் பரிசோதனை செய்ய வேண்டும் என்பதும் மருத்துவ நிபந்தனைகளாகும்.

தவிர, அன்டிஜன் பரிசோதனையின்போது கொரோனாத் தொற்று உண்டு என்ற முடிவை பிசிஆர் பரிசோதனை நிராகரித்த பதிவுகளும் உண்டு.

ஆக, அன்ரிஜன் பரிசோதனையை வைத்துக் கொண்டு கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையைக் கணிப்பிடுவது நம்பகத்தன்மை குறைந்தது என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும். இவை ஒரு சிறு தகவலுக்காக மட்டுமே.

மாறாக, கொரோனாத் தொற்றுக் காரணமாக ஏற்பட்ட இழப்புகள் ஏராளம். குறிப்பாக பொருளாதாரமும் கல்வியும் கடும் வீழ்ச்சி கண்டுள்ளன.

இதற்கு மேலாக, உறவுகளைச் சந்திக்க முடியாத சூழ்நிலை, வயோதிபப் பெற்றோர்களைப் பார்க்கவும் பராமரிக்கவும் முடியாத கட்டங்கள், நோய்வாய்ப்பட்டவருக்கு உரிய சிகிச்சை அளிப்பதில் இருக்கக்கூடிய இடர்பாடுகள், திருமணம் உள்ளிட்ட மங்கல நிகழ்வுகளையும் மரணச் சடங்குகள், ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள், இறுதிக்கிரியைகள் என்பவற்றை நிறைவாகச் செய்து ஆற்றுப்பட முடியாத அவலங்களும் கொரோனாத் தொற்றின் பாதகவிளைவுகளாம்.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாத் தொற்றின் காரணமாக இறை நம்பிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுவிடுமோ என்ற ஏக்கம் இருக்கவே செய்கிறது.

ஆம், கொரோனா காரணமாக பூசை வழிபாடின்றி பூட்டிக்கிடக்கின்ற ஆலயங்கள், நேர்த்திக்கடனைத் தீர்க்க முடியாத வேதனைகள், திருமண விழாவைச் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் என்றவாறாக; இறை வழிபாடும் இறை நம்பிக்கையும் மெல்ல மெல்ல விடைபெறுவது போன்ற ஒரு சூழமையையும் உணர முடிகிறது.

இந்நிலையில் கோவில் திருவிழாவில் கொரோனாக் கொத்தணி என்ற சுகாதாரத் தரப்பின் அறிவிப்புகள், ஆலயங்கள் மீதான நம்பிக்கையை வேரறுத்து விழுத்துவதாக உள்ளன.

உண்மை, பிசிஆர் பரிசோதனை எவருக்குச் செய்தாலும் அவருக்கு கொரோனா பொசிற்றிவ் என்பதாக இருக்கக்கூடிய சமகால சூழலில், திருவிழாவுக்குச் சென்றவர்களைச் சோதித்துவிட்டு திருவிழாக் கால கொத்தணி என்று சொல்ல முனைந்தால், அதன் எதிர்வினை எங்களின் ஆன்ம சுகத்தை இழப்பதாக இருக்கும் என்ற உண்மையை சுகாதாரத் தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் எம் தாழ்மையான கோரிக்கை.

## இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்ட 9 மாடுகளுடன் ஒருவர் பளைப் பொலிஸாரால் கைது

(முறிகண்டி)

ஒரு பசு அடங்கலாக இறைச்சிக்காக எடுத்துச்செல்லப்பட்ட 9 மாடுகளுடன் ஒருவர் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து கூலர் வாகனம் ஒன்றில் இறைச்சிக்காக மாடுகள் எடுத்து செல்லப்படுவது தொடர்பில் பளை பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து, பளை நகரில்சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது ஒரு பசு மாடு அடங்கலாக 9 மாடுகள் அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் ஏற்றிச்செல்லப்பட்ட நிலையில் கால் நடைகள் மீட்கப்பட்டதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு இறைச்சிக்காக மாடுகளை அனுமதிப் பத்திரமின்றி ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுவரும் பளை பொலிஸார், குறித்த விடயம் தொடர்பில் இன்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

(ம-3,100)

## நாட்டின் கடற் பிரதேசங்களில் கடல் கொந்தளிப்பாக காணப்படும்

### காற்றின் வேகமும் அதிகரிக்கும்

(கொழும்பு)

நாட்டில் கடற் பிராந்தியங்களில் கடல் சற்று கொந்தளிப்பாகக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற் பிராந்தியங்களிலும் புத்தளம் தொடக்கம் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற் பிராந்தியங்களிலும் மணித்தியாலத்திற்கு 60 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என குறிப்பிட்டுள்ளது.

இதனை தவிர, நாட்டை ' சூழவுள்ள ஏனைய கடற் பிராந்தியங்களிலும் காற்றின் வேகம் சற்று அதிகரித்து காணப்படும்.

இதனால் மீனவர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **நாளை 29 ஆம் திகதி** வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை.

**யாழ். பிரதேசத்தில்** அராலி கிழக்கு கரப்பிட்டி பிள்ளையார் கோவிலடி, அராலி வடக்கு செட்டியார்மடம் சந்தி, அராலி தெற்கு ஐயனார் கோவிலடி களுவாத்துறை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** ஆதிவிநாயர், கோவிலடி வைரவப்புளியங்குளம், மறக்காறம்பளை - கணேசபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## விசுவமடுவில் விபத்து ஒருவர் படுகாயம்

(பனிக்கன்குளம்)


முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடு 12 ஆம் கட்டை பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது

இதன்போது படுகாயமடைந்த•நபர் 1990 அவசர நோயாளர் காவுவண்டி மூலம் தர்மபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,100,281)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

குருதேவரைக் காண ம- மூன்றாம் முறையாகச் சென்றார். வராக நகரிலுள்ள தன் சகோதரியின் வீட்டில் ம- தங்கியிருந்த காலம் அது. அவரைச் சந்தித்ததிலிருந்து ம-வுக்கு எப்போதும் அவரைப்பற்றிய சிந்தனைதான்.

எப்போதும் அந்த ஆனந்தமயமான மூர்த்தியைத் தரிசித்துக் கொண்டிருப்பது போலவும் அவரது அமுத மொழிகளைக் கேட்டுக் கொண்டிருப்பது போலவும் அவருக்குத் தோன்றும்.

இந்த எளிய மனிதர் எப்படி இந்த ஆழ்ந்த தத்துவங்களை எல்லாம் கற்றார், எப்படி புரிந்துகொண்டார் என்ற கேள்வி ம-வின் மனத்தில் எழுந்தவண்ணம் இருந்தது.

இவ்வளவு ஆழமான விடயங்களை இவ்வளவு எளிமையாக யாரும் விளக்கி இதுவரை அவர் கேட்டதில்லை. 'மீண்டும் அவரிடம் எப்போது போவேன், அவரை எப்போது காண்பேன்' என்பதே இரவுபகல் அவரது சிந்தனையாக இருந்தது.

மெள்ளமெள்ள ஞாயிறும் வந்தது. வராக நகரைச் சேர்ந்த நேபால் பாபுவுடன் ம- தட்சிணேசுவரக் கோயிலை அடைந்தார். மாலை மூன்று அல்லது நான்கு மணி இருக்கும். முன்பு பார்த்த அதே அறையில் குருதேவர் சிறிய கட்டிலின்மீது உட்கார்ந்திருந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சிறுதானியங்களும் ஆரோக்கியமும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சிறுதானியங்களை தினமும் சாப்பிட்டு வந்தால் அரிசி கோதுமை போன்ற தானியங்களுடன் ஒப்பிடும் போது சிறு தானியங்களில் புரதச்சத்தும் நார்ச்சத்தும் அதிகளவில் காணப்படுகின்றது.

கம்பு,சோளம்,கேழ்வரகு, வரகு, தினை, சாமை, குதிரை வாலி போன்றவையே சிறு தானியங்கள் ஆகும்.

சிறு தானியங் களை எடுக்கும் போது நீரிழிவு, இரத்தக்கொதிப்பு, இருதய நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். உடலுக்கு சக்தியையும் ஆற்ற லையும் கொடுக்கக்கூடியது.

### சிறு தானிய மா


4 வகையான சிறு தானிய வரகு- வரகில் நார்ச்சத்தைத் தவிர கல்சியம், இரும்புச்சத்தும் காணப்படுகிறது.

வெள்ளைச் சோளம்- மலச் சிக்கலைத் தீர்க்கக் கூடியது.

கம்பு-இரும்புச்சத்து அதி கம் உண்டு. உழுந்து, சாமை எல்லாம் சமஅளவு எடுத்து தனித்தனியாக நன்றாக நீரில் கழுவி 5 மணிநேரம் தனித் தனியாக நீரில் ஊற வைக்க வேண்டும்.

முதலில் வரகரிசியை வடித்து பின்பு மற்றைய சிறு தானி யங்களையும் சேர்த்து நன்கு அரைக்க வேண்டும். உழுந்து சேர்த்து அதனு டன் வெந்தயம் சிறிதளவு நனையவைத்து சேர்த்து நன்கு அரைக்க வேண்டும்.

ஒன்றாக சேர்த்து கலந்து விட வேண்டும். தேவையான அளவு உப்பு சேர்த்து 7,8 மணி நேரம் புளிக்க வைத்து இட்லி தோசை தயாரித்து பயன்படுத்தலாம்.





எந்தவகையானஉணவை எந்த வேளை சாப்பிடுவது என்பது ஆரோக்கியத்திற்கு மிக மிக முக்கியம்.

ஒருத்த ரின் பாரம்பரிய பின்னணி, உடல்வாகு, தொழில் , வயது ஆகிய பின்னணியை வைத்தே உணவைத் தீர்மானிக்க வேண்டும்.

காலை உணவு அதிக முக்கியமான உணவா கும். தவிர்க்க முடியாத உணவாகும். இரவு 12 மணி நேரம் எதுவுமே வயிற்றில் இருக்காது.

எனவே காலை உணவை எடுக்கும்போது அமிலச் சுரப்பியை சீர் செய்துவிடும் மண் டலத்தை சீராக இயங்க வைக்கும்.

சோளத்தில் வெண் சோளம், சிறுசோளம் என இரு வகையுண்டு. சோளத்தில் புரதச் சத்து அதிகம் உண்டு. போசனைக் கூறுகள் நிறைய உண்டு.

சிறுதானியங்களை எமது முன்னோர்கள் அதிகம் சேர்த்துக் கொண்டார்கள். அரிசி வகைகளின் பாவனை கூடக் கூட சிறு தானியங்களின் பாவனை அருகி வந்துள்ளது.

தினை இயல்பாக பீற்றா கரோட்டின் அதிகளவில் உண்டு. கண், தோல் பாதுகாப்பிற்கு அவசியம். நோய் எதிர்பாற்றலையும் அதிகரிக்கும்.

போதியளவு நார் நிறைந்த உணவை உண்பவர்களின் மலம் அதிகளவாகவும் மெதுமையாகவும் (சொரு சொருப்பாகவும்) நீரில் மிதக்கும் தன்மை கொண்டதாகவும் காணப்படும்.


மிகவும் எளிதாக குறுகிய நேரத்தில் மலம் வெளியேறும். மலச் சிக்கல் எக் கட்டத்திலும் எழ மாட்டாது.

பெருங்குடலில் உள்ள பித்தக் குவியல்கள் சிறிய அளவிலேயே காசிநோஜென்ஸ் கொண்டுள்ளதால் புற்றுநோய் ஏற்படுத்தும் பொருட்கள் மிகச் செறிவில்லாமல் காணப்படும்.

நோயை ஏற்படுத்தக் கூடிய பொருட்கள் பெருங் குடலில் சிறிதளவு காணப்பட்டாலும் தங்கு தடையின்றி வெளி யேறுவதாக அமைந்துவிடும். ஆகவே தானியங்களை நாம் மாறி மாறி உணவில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சிறு தானியம், தினை -2 கப், சாமை-2 கப், வரகு-2கப், குதிரைவாலி-2 கப், சிவப்பு அரிசி -2 கப்,ராகி-2 கப், கோதுமை-2 கப், சோளம்-2 கப்,பார்லி-2 கப்,கொள்ளு-2 கப்.

எல்லாவற்றையும் சேர்த்து 4,5 தடவைகள் ஒன்றாக நீரில் கழுவி வடித்து சுத்த மான வெள்ளைத் துணியில் பரவி ஈரப்பதன் இல்லாமல் உலர்ந்ததும் மிக்ஸியில் நுண்ணிய பொடியாக்கி வாணலியில் கொஞ்சம் கொஞ் சமாக வறுத்து எடுத்து சிறிது உப்பு சேர்த்து கொஞ்சம் கொஞ் சமாக நீர் சேர்த்து பிட்டுக்கு மாக் குழைப்பது போல் குழைத்து இட்லி சட்டியின் மேல் துணி போட்டு அதில் இம் மாவைப் போட்டு சிறிது நல்லெண்ணை சேர்த்து தேவையான அளவு சர்க்கரையும் சேர்த்து சத்து மாவாகப் பயன்படுத்தலாம்.





சிறுவர்கள், கற்பிணித் தாய் மார்கள், பாலூட்டும் தாய் மார், முதியோர், எல்லோருக்கும் சிறந்த ஆரோக்கிய உணவாகும்.

### சிறு தானிய சக்கரைப் பொங்கல்

பாசிப்பருப்பு -1/4 கப், குதிரை வாலி அரிசி-2 மேசைக் கரண்டி,வரகு-2, திணை-2, சாமை-2

கொஞ்சமாக நீரில் போட்டு அலசி நீர் ஊற்றி 15 நிமிடங்கள் ஊற வைத்து 15 நிமிடம் கழித்து ஒரு பாத்திரத்தை அடுப்பேற்றி 1 மேசைக்கரண்டி நெய் ஊற்றி சிறு தானியங்களைப் போட்டு ஒரு நிமிடம் வறுத்து 2 1/2கப் அளவு நீர் விட்டு கொதிக்க விடவும்.

நன்கு வெந் ததும் 200 கிராம் சர்க்கரையை இடித்து நீர் விட்டு காய்ச்சி வடித்து, வடித்த சக்கரைத் தண்ணீரை பொங்கலுடன் சேர்த்துக் கிளறி சக்கரைப் பொங்கலை சிறிது நேரம் வேக வைக்க விடவும். (5 நிமிடங்கள்) இன்னுமொரு பாத்திரத்தில் சிறிது நெய் சேர்த்து முந்திரிகைப் பருப்பு முந்திரி வற்றல் இஞ்சி 1/4 கப் தேங்காய்த் துருவல் சேர்த்து வறுத்து பொங்கலில் கலந்து கிளறி பொங்கலைத் தயார் பண்ணவும்.

ஆரோக்கியத்திற்கு மிகவும் உகந்தது.

சிறிதளவு சாப்பிட்டதும் நன்றாக சாப்பிட்ட திருப்தி ஏற்படும். குடலில் செயற்பாடுகளையும் சீராக்கும்.





(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றில்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனிஞ்சியன் குளப் பகுதியில் கிணற்றில் விழுந்து கணவன் மனைவி இருவரும் உயிரிழந்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தை சேர்ந்த றஞ்சன் பிரதீபன் (வயது-31) பிரதீபன் மாலினி (வயது-27) என்பவர்களே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

குறித்த இருவரும் திருமணமாகி 10 மாதங்கள் கடந்த நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-3,281)

## மட்டுவிலில் மாடு...

தென்மராட்சி மட்டுவில் தெற்கு பகுதியில் மாடு மேய்க்கச் சென்ற முதியவர் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டுவில் தெற்கு பகுதியைச் சேர்ந்த 67 வயதான ஆறுமுகம் ஜீவானந்தம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது: (ம-3,30)

## சைக்கிளில்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை பகுதியில் சைக்கிளில் சென்றவர் திடீரென வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முள்ளியவளை மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த 74 வயதுடைய நடராசா சிவராசா என்பவரே சைக்கிளில் பயணிக்கும் போது திடீரென விழுந்து உயிரிழந்துள்ளார்.

இவரின் சடலமானது முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பிசிஆர் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (ம-3,281)

## 48 பேர்...

டில் இதுவரையில் பதிவாகியுள்ள கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4,195 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 28 ஆண்களும் 20 பெண்களும் அடங்குவதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)

## +1,688...

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 299, 874 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## யாழில் ஆண்...

போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த உடுவிலைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இதுவரை 120 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். (ம-3,33)

## கொரோனாத்...

பாளர், மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அதன்படி, சிகிச்சைப் பிரிவுகளில் ஒக்ஸிஜனின் தேவை அதிகரித்துள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

மருத்துவமனைகளில் திட்டமிடப்பட்ட இடம் இப்போது நிறைவடைந்துள்ளதாக பல மருத்துவமனைகளில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் மருத்துவர் ஹேமந்த ஹேரத் கூறினார். (ம-3)

## உலகின் மிகப்...

பெரிய நீல இரத்தினக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

510 கிலோகிராம் எடையுள்ள இது சுமார் 2.5 மில்லியன் கரட் கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது,

மேலும் இது "செரண்டிபிட்டி சபையர்" என்று அழைக்கப்படுகிறது.தேசிய நகை மற்றும் இரத்தினக்கற்கள் அதிகார சபையின் இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்திடம் விசாரித்தபோது, அது குருவிந்த ரகத்தைச் சேர்ந்த அருணுல் இரத்தினங்களின் கொத்து என அடையாளம் காணப்பட்டது.

இரத்தினபுரி மாவட்டத்தில் வசிக்கும் ஒரு மாணிக்க வணிகரின் வீட்டின் தோட்டத்தில் கிணறு தோண்டியெடுக்கும் தொழிலாளர்களினால் கற்கள் கொத்து கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தக் கொத்து வெளிர் நீலமானது மற்றும் சர்வதேச சந்தையில் சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புடையதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## வடக்கில் 44...

வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 623 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் 29 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் 03 பேர், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா தலா ஒருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள் தனிமைப்படுத்தல் முகாமில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## அதிபர், ஆசிரியர்...

வைத்து தெரிவித்தார்.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்ப்பது தொடர்பில் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதற்கமைய எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பணியாற்றுவதற்கு தயாராகுமாறு அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கத்தினரிடம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ம-3)

## நாட்டை மூடி...

நேற்றுமுன்தினம் 26ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாத நிறைவில் மேலும் தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கும் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

இந்த தடுப்பூசிகளை ஏற்றினால் 80% தடுப்பூசி ஏற்றப்பட்டு முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டை முடக்கி வைத்திருந்ததே பொருளாதார வீழ்ச்சிக்கு காரணம் என ஜனாதிபதி இதன்போது அமைச்சர்களிடம் தெரிவித்துள்ளார். (ம-3)

## தீக்...

தீக்காயங்களுக்குள்ளான 2 பிள்ளைகளின் தாயார் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் கட்டைக்காடு, முள்ளியானைச் சேர்ந்த யோகேஸ்வரன் பாலரஞ்சிதா (வயது- 32) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 22ஆம் திகதி மதியம் நின்று சமைக்கும் விறகு அடுப்பில் தேநீர் வைப்பதற்கு மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பை பற்ற வைத்துவிட்டு தீக்குச்சியை கீழே போட்டுள்ளார்.

அடுப்புக்கட்டுக்கு கீழே கணவர் பெற்றோல் போத்தலை வைத்திருந்தமை தெரியாமல் குடும்பப் பெண் தீக்குச்சியை போட்டமையால் ஏற்பட்ட தீ விபத்தில் அவர் சிக்கியுள்ளார்.

இதன்போது உடம்பில் தீப்பற்றியதால் அவர் கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளார்.

எரிகாயங்களுக்கு உள்ளான அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு 5 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை அவர் உயிரிழந்தார் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,33)

## 46 குழந்தை...

தொற்று அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த குழந்தைகள் தாய்மார் மற்றும் மருத்துவ தாதியுடன் தொடர்புபட்டவர்களுக்கு அவசரமாக பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப் படவுள்ளது.

குறித்த மருத்துவத் தாதி வேலணையிலிருந்து நெடுந்தீவு வைத்தியசாலைக்குச் சென்று பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

### மெகா பவர்

திகதி 27/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0866
S 11 01 28 46 55

### சுபிரி வாசனா

சீட்டிழுப்பு திகதி 2021/07/27 — 1604
சுப்பர் இலக்கம் 11 — வெற்றி இலக்கங்கள் 24 34 54 56

### மஹஜன சம்பத

திகதி 2021/07/27
சீட்டிழுப்பு இலக்கம் 4518
P 3 4 6 8 8 1

### கொவிசெத

சீட்டிழுப்பு திகதி 27.07:2021
சீட்டிழுப்பு இலக்கம் 2813
K 05 36 64 68

### தன நிதானய

திகதி - 2021.07.27
சீட்டிழுப்பு இலக்கம் - 548
Q 51 58 67 76

### அத கோடிபதி

கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1321
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 27.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,461,236
வெற்றி இலக்கங்கள் 24 62 68 72 F

### சனிதா

கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 3656
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 27.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,911,326
வெற்றி இலக்கங்கள் 07 24 54 75 A

### ராசி

சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி: 27.07.2021
வெற்றி வாரம்: 3207
வர்ணம்: சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 15 22 44 52
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 11,111,821/=

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1495 — நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 27/07/2021 — தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் G 07 25 51 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் 60,582,656/=

### ஜய

736
27.07.2021
X 04 18 31 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,391,105
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை வட்டுவாகலில் இராணுவ தேவைக்காக காணி அபகரிக்க முயற்சி

## நாளை அனைவரும் ஒன்றிணையுமாறு சிவாஜிலிங்கம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுவாகலில் இராணுவத் தேவைக்காக காணி அபகரிக்கும் முயற்சி நாளை நடைபெறவுள்ளது.

தமிழ் தேசிய உணர்வாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து குறித்த காணி அபகரிப்பை எதிர்க்கவருமாறு முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, நல்லாட்சி அரசு காலத்திலும் காணி அபகரிப்பு இடம்பெற்றுள்ளது.

குறிப்பாகவட்டுவாகலில் 617ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டது. வடக்கு- கிழக்கிற்கு வெளியிலும் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தின் ஒருபகுதியாக பல்வேறிடங்கள் அபகரிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

யாழ். மாவட்ட செயலகம் முன்பாக பழைய கச்சேரி கட்டடம் விற்பனை முயற்சிகள் இடம்பெறுகின்றன. குருந்தூர்மலை, வெடுக்குநாறி மலை ஆகிய இடங்களில் புத்த விகாரைகள் இருந்ததாக கூறி அதனை சூழ பல ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இந்த அபகரிப்புகள் வடக்கு -கிழக்கை திட்டமிட்டு துண்டிக்கும் நடவடிக்கைகளே. வாகரையிலும் 500 ஏக்கருக்கு மேல் கடற்படை பிடித்து வைத்துள்ளது.

குச்சவெளி பிரதேசத்தில் திரியாய் உட்பட அரிசிமலை பிக்கு என்கிற ஒருவர் அப்பகுதியில் 32 விகாரைகளை அமைப்பது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள பல ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

தமிழர் ஒரு தேசிய இனம். இந்த நில அபகரிப்பை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. 12 ஆயிரம் கோடி பெறுமதியில் இலவசமாக தீவகத்தில் சூரிய மின்கலமும் காற்றாலை மூலமும் மின் உற்பத்தியை மேற்கொள்ள இந்தியா முன்வந்திருந்தது.

ஆனால் இதுவுரை அமைச்சரவை அனுமதி வழங்காது சீனவின் கடன் திட்டத்தில் மேற்கொள்ள முயல்கிறது. பூநகரியில் 16 பேருக்கு தற்போது மீன்பிடி அமைச்சரால் கடலட்டை பண்ணை அமைக்க இடம் கொடுக்கும் முயற்சிகள் இடம் பெறுகிறது. இது சீனாவிற்கு கடலட்டை பண்ணை வழங்குவதை திசை திருப்பும் ஒரு முயற்சியே.

சிங்களவர் ஒருவரை பிரதம செயலாளராக நியமித்தனூடாக மாகாணங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களை பறிக்கின்ற ஒரு நடவடிக்கையே. நாளை முல்லைத்தீவு வட்டுவாகலில் கோத்தபாய கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள காணியை நில அளவை மேற்கொண்டு அபகரிப்பதற்காக காணி உரிமையாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அபகரிக்கப்பட்ட காணிகளை சீனாவிற்கு விற்பதற்கான நடவடிக்கைகளே இடம்பெறுகின்றன.கொரோனாவை பயன்படுத்தி இராணுவ நில அளவையாளர்கள் மூலம் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பல ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன.காணி அபகரிப்பை தடுத்து நிறுத்த தமிழ் தேசிய உணர்வாளர்கள், அரசியல் கட்சிகள் ஆதரவாளர்கள் அனைவரும் ஒன்று திரண்டு நிறுத்த முன்வர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.(ம-03.33)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (7476)

**வேலை வாய்ப்பு**

W.E.C நிறுவனத்தின் வட மாகாணத்தின் புதிய கிளைகளுக்கான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளது. ஒவ்வொருவரது கல்வித் தகைமைகளுக்கு ஏற்றவாறு நேர்முகத் தேர்வில் பதவிகள் வழங்கப்படும். தரம் 10, O/L, A/L படித்த இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கலாம். 15,000/= - 32,000/= வரை அடிப்படை வருமானம் வழங்கப்ப்படும். பதவிகளுக்கேற்ப பயிற்சிகள் வழங்கப்படும். தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும். 50 நபர்களுக்கு மட்டும் வாய்ப்புக்கள் உள்ளன. (7473)

077 174 3524, 077 936 0894
021 722 3317

**யப்பான் சைக்கிள்**

1.லேடீஸ் சைக்கிள்கள்
2.யென்ஸ் சைக்கிள்கள்
3.கியர் சைக்கிள்கள்
4.மடக்கும் சைக்கிள்கள்
5.பாரம் எற்றும் சைக்கிள்கள்
6.LED ஒட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்

நீண்டகாலப் பாவனை

இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு.
கழுவிபூட்டுதல், திருத்த வேலைகள் இல்லை.

சுன்னாகம் - லக்சுமி நாராயணா 077 398 1094
கோப்பாய் - கஜமுகன் கொமினிகேசன் 077 308 6949
நெல்லியடி - கௌரி சைக்கிள் - 077 869 6837
சாவகச்சேரி - சூரியகுமார் - தாமோதரம் வீதி - 077 443 6123
கிளிநொச்சி - கண்ணன் மல்ரி சென்ரர் - இரணைமடுச் சந்தி 077 368 2651
வவுனியா - முகவர் தேவை
யப்பான் சைக்கிள் விற்பனை செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
விஷேட விலைக்கழிவு உண்டு.

**யப்பான் சைக்கிள் B பசார்**

இல. 202, கந்தரோடை றோட், சுன்னாகம்.
078 615 5929 (C-2429)


# மரண அறிவித்தல்

## திருமதி புஸ்பராணி செல்வரட்ணம்

(ஓய்வுநிலை மருத்துவ தாதி – மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை)



மாகியப்பிட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி செல்வரட்ணம் நேற்று முன்தினம் (26.07.2021) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இணுவிலைச் சேர்ந்த சரவணை - வேலாசி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அலெக்ஸ் செல்வரட்ணம், சாள்ஸ் கருணாரட்ணம் (பிரான்ஸ்), நைல்ஸ் ஞானரட்ணம், எட்வின் குணரட்ணம், அன்ரன் ஜெயரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சத்தியசுலோசனா (டல்சி), காலஞ்சென்ற சுரேஸ்குமார் (சுரேஸ்), பிரதீபா (செல்வா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அருமைநாயகம், இன்னாசிப்பிள்ளை (தங்கம்), மதியழகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அன்ரன் - ஆகிரா (கனடா), அன்ரனிற்றா (தங்கா) - ஜோய்பிரதீவ், கிருசலின் அனிற்றா (செல்வதி) - ஒலிவர் வசந்தன், அனோயா - வசீகரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆசிக்றோசன், ஒலிவியா, ஒலிவியோ, அசரியா, அமரியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மாகியப்பிட்டியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (28.07.2021) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு இறுதி வழிபாடு வீட்டில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மாகியப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத்தில் காலை 10.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித செபஸ்தியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (7471)

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

செல்வா : 077 926 2202

தகவல்:- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 2 இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. ஆகக் குறைந்தது O/L அல்லது A/L வரை படித்த வேலையுள்ள/ வேலையில்லத பெண் விரும்பத்தக்கது. (சீதனம் எதர்பார்க்கப்படவில்லை.) (7458)

075 883 0107

**AGX**

ஏற்றுமதியாளர்கள்
ஆகாய,கடல் மார்க்கமாக
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
கனடா 650/=
லண்டன் 975/= (C-2386)
இல. 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 443 1578

**கனடா-STUDENT VISA**

A/L எடுத்த மாணவர்கள் குறைந்த செலவில் கனடாவில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள். (C-2385)
IELTS இலவசமாக கற்பிக்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)
VISA APPLICATION
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
0777-068-777

**அண்ணா** EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-2384)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000/- பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

**வரவேற்பாளர் தேவை**

K.K.S Road, கோண்டாவிலில் இயங்கும் எமது கல்வி நிறுவனத்திற்கு பெண் வரவேற்பாளர் தேவை.
தகைமை : G.C.E O/L (C-2430)
077 991 2628

**Vacancy**

Accounts clerk, Cashier(part time), Data Entry(female), Clerk(female), Accounts Assistant, Packing, Sales man, Sales girl, Field work, Loading Unloading (7475)
021 315 2500
074 138 3368

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
0768226240 DHL (C-2383)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.